*அத்தியாயம் 4*

# விலைகள், கூலிகள் மற்றும் தொழில்நிலை

## 4.1 பொதுநோக்கு


இவ்வாண்டின் ஆரம்பத்தில் எறிவு செய்யப்பட்டவாறு விலைப் பணவீக்கம் 2004 இல் சில காலத்துக்கு கீழ்நோக்கிய படிப்படியான அசைவையும் பின்பு அதன் மேல்நோக்கிய போக்கையும் ஆரம்பித்தது. இது முதலில் முதன்மைச் சந்தை மட்டத்திலும் பின்பு சில்லறைச் சந்தை மட்டத்திலுமாக விலைச்சுட்டெண்கள் எல்லாவற்றிலும் அவதானிக்கப்பட்டது. இதன்படி, கடந்த ஆண்டுகளில், விலை உறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்த காரணிகள் 2004 இன் நடுப்பகுதியிலிருந்து பாதகமானதாக மாறின.

2004 இல் அவதானிக்கப்பட்ட அபிவிருத்திகளுக்கு பங்களிப்புச் செய்த காரணிகள் பொருளாதாரத்தின் கேள்வி மற்றும் வழங்கல் ஆகிய இரண்டையும் சார்ந்ததாக இருந்ததுடன், இவற்றுள் வழங்கல் பக்கத்திலான காரணிகள் ஆதிக்கம் பெற்றிருந்தன. பொருளாதாரம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தோற்றம்பெற்ற வழங்கலிலான திடீர் தாக்கங்களினால் பாதிப்படைந்தது. உள்நாட்டில், சில பகுதிகளில் 2003 இன் பிற்பகுதியிலிருந்து 2004 இன் பெரும்பகுதி வரை நீடித்து நிலைத்திருந்த வரட்சியானது, பணவீக்கத்தின் சகல அளவீடுகளிலும் சார்புரீதியில் உயர் பங்கைக் கொண்டிருக்கும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட முக்கிய உணவுப் பொருட்கள் மீது பாதகமான விளைவைக் கொண்டிருந்ததுடன், அவற்றின் விலைகளில் மேல்நோக்கிய அழுத்தத்தையும் ஏற்படுத்தியது. வெளிநாட்டிலிருந்தான தாக்கமாக இவ்வாண்டிலேற்பட்ட வலுவான உலகளாவிய கேள்வியானது, முக்கிய பண்டங்களின் குறிப்பாக பெற்றோலியப் பொருட்களின் பன்னாட்டு விலைகளை அதிகரிக்கச் செய்து செலவுத் தூண்டல் பணவீக்கத்தை உருவாக்கியது. முன்னைய ஆண்டில் சில பொருட்களின் விலையிலேற்பட்ட வீழ்ச்சிகள் மற்றும் ஏனைய பொருட்களின் குறைந்த விலை அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2004 இல் அநேகமான நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளின் பன்னாட்டு விலைகள் அதிகரித்தன. பெயரளவு பயன்தரு செலாவணி வீதத்தின் அசைவுகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு, முக்கிய நாணயங்களுக்கெதிரான ரூபாவின் பெறுமானத் தேய்வானது இலங்கைக்கான இறக்குமதிகளின் அதிகரித்துச் செல்லும் பன்னாட்டு விலைகளின் பாதகமான தாக்கத்தை சிக்கலாக்கியதன் மூலம் நிலைமையை மோசமடையச் செய்தது. இதனால், வளமாக்கி, மூலப்பொருட்கள் மற்றும் எரிபொருட்கள் போன்ற இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய உள்ளீடுகளின் செலவுகள் அதிகரித்து உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அநேகமான பொருட்களின் செலவு அமைப்பை உயர்த்தியதுடன், செலவுத் தூண்டல் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தங்களையும் உருவாக்கியது. வழங்கல் பக்கத்திலான இக்காரணிகளை, இவ்வாண்டில் உள்நாட்டு அரிசி உற்பத்தி 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை மத்தியிலும் அனைத்து பணவீக்க அளவிடல்களிலும் தனித்து அதியுயர் பங்கை கொண்டிருக்கும் அரிசி இறக்குமதிகள் மீது கட்டுப்பாட்டைப் பேணுவதன் மூலம் உள்நாட்டு வேளாண்மையாளர்களை பாதுகாத்த வர்த்தகக் கொள்கையானது வலுப்படுத்தியது. இறக்குமதிகள் மீதான பெறுமதி கூட்டல் வரியின் மேல்நோக்கிய திருத்தமும் செலவால் உந்தப்பட்ட அழுத்தங்களுக்குப் பங்களிப்புச் செய்தது.

முன்னைய ஆண்டின் 15 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2004 இல் பண நிரம்பலிலான விரிவாக்கம் ஏறத்தாழ 20 சதவீதமாக உயர்வாக விளங்கி, பொருளாதாரத்தில் திரவ மட்டங்களை உயர்த்துவதன் மூலம் விலைகள் மீது கேள்விப் பக்கத்திலான அழுத்தங்களை அதிகரித்தது. வங்கித்தொழில் மூலங்கள் ஊடாக பகுதியளவில் நிதியிடப்பட்ட உயர் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மற்றும் தனியார் துறைக்கான விரைவுபடுத்தப்பட்ட கொடுகடன் விரிவாக்கம் என்பன நாணய விரிவாக்கத்துக்கு பங்களிப்புச் செய்தன.

கூலி அபிவிருத்திகளும் நாட்டின் விலைப் பணவீக்கத்தின் மீது தாக்கத்தைக் கொண்டிருந்தன. 2003 இல் மாற்றமடையாது தொடர்ந்து விளங்கிய அரச துறை பெயரளவுக் கூலிகள் இவ்வாண்டின் ஆரம்பத்திலும், இறுதியிலும் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. இவ்வாண்டின் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட கூலி அதிகரிப்பு, நடைமுறையிலுள்ள பணவீக்க வீதங்களால் நியாயப்படுத்தக் கூடியதைவிட

வரைபடம் 4.1
**விலைச் சுட்டெண்களின் போக்குகள்**



அதிகரித்த வீதங்களாக விளங்கி, உற்பத்தித் திறனில் தெளிவான இணையான அதிகரிப்பினை ஏற்படுத்தாது உண்மைக் கூலிகளில் அதிகரிப்புக்களை விளைவித்த மொத்தக் கேள்வியை அதிகரித்ததன் மூலம் இவ்வாண்டில் விலை அழுத்தத்திற்குப் பங்களிப்புச் செய்தது. அரசதுறை கூலி அபிவிருத்திகளுக்கு முரணாக, சில முறைசார் தனியார்துறை தொழிலாளர் வகைகள் ஆகக் குறைந்த உண்மைக் கூலிகளினால் இழப்புக்களை கொண்டிருக்கையில், முறைசாராத் தனியார் துறையிலுள்ள பெயரளவுக் கூலிகள் பொதுவாக பணவீக்கத்துடன் இசைவாக அதிகரித்தன.

2004 இல் தொழில் சீர்திருத்தங்களிலான முன்னேற்றம் மெதுவடைந்து காணப்பட்டது. கொள்கைப் பக்கத்தில், தொழிற் சங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட பிரதிநிதித்துவங்களைத் தொடர்ந்து தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு 2004 மே 26 ஆந் திகதியன்று அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் 2003 திசெம்பரில் நடைமுறைக்குவந்த திருத்தப்பட்ட வேலையாட்களின் தொழில்நிலை முடிவுறுத்தல் சட்டத்தின் நடைமுறைப் படுத்தலை இடைநிறுத்தியதுடன் தொழிற்சந்தை சீர்திருத்தங்கள் நிகழ்ச்சித்திட்டம் முழுவதையும் மீளாய்வு செய்வதற்காக 2004 யூனில் தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, தொழிற் சங்கங்கள் மற்றும் தொழில் தருநர்களின் பிரதிநிதிகள் ஆகியோரைஉள்ளடக்கிய தேசிய தொழில் மதியுரைச் சபை ஏற் படுத்தப்பட்டது. இச்சபையின் முக்கிய பணியாதெனில், தொழிலிழந்த தொழிலாளர்களுக்கு வருமான உதவியை வழங்குவதற்கென தொழிலற்றோர்க்கு நன்மையளிக்கும் திட்டத்துடனான ஒரு புதிய இழப்பீட்டுச் சூத்திரத்தை தீர்மானிப்பதாகும். இப்புதிய சூத்திரமானது 2004 ஒத்தோபர் அளவில் உருவாக்கப்பட்டதுடன் தொழிலற்றோருக்கான நன்மையளிக்கும் திட்டத்துடன் 2005 இன் முற்பகுதியில் வர்த்தமானியில் வெளியிடப்படவிருக்கிறது.

2004 இல் குடித்தொகை வளர்ச்சி, 2003 இன் 1.3 சதவீதத்திலிருந்து 1.1 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. இதேவேளை வளர்ச்சி வீதங்களில் மாவட்ட ரீதியிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. முன்பு பாதுகாப்பு நிலைமையால் பாதிப்புக்குள்ளான பிரதேசங்கள், தொடர்ச்சியான போர்நிறுத்தத்தால் சார்புரீதியில் நிலவிய சமாதானச் சூழலின் கீழ் குடித்தொகையில் ஒப்பீட்டளவில் உயர் வளர்ச்சியைப் பதிவு செய்தன. எனினும் தொழிற்படை பங்கேற்பு வீதம், சார்புரீதியில்

அட்டவணை 4.1
**2003, 2004 இல் விலைப் போக்குக்கள்**

| ஆண்டு | மாதம் | மாதாந்த மாற்றம் (%) | | | | | | ஆண்டுச் சராசரி மாற்றம் (%) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் | கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண் | அநுராதபுர நுகர்வோர் விலைச் சுட்டெண் | மாத்தளை நுகர்வோர் விலைச் சுட்டெண் | மாத்தறை நுகர்வோர் விலைச் சுட்டெண் | இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் | கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் | கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண் | அநுராதபுர நுகர்வோர் விலைச் சுட்டெண் | மாத்தளை நுகர்வோர் விலைச் சுட்டெண் | மாத்தறை நுகர்வோர் விலைச் சுட்டெண் | இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் |
| 2003 | சனவரி | 4.2 | 1.7 | 1.4 | 3.0 | 1.2 | 2.1 | 10.0 | 6.5 | 8.6 | 8.0 | 8.1 | 9.6 |
| | பெப்புருவரி | -1.1 | -0.1 | -1.1 | -2.4 | -0.7 | -0.6 | 10.2 | 6.1 | 7.9 | 7.4 | 6.8 | 8.9 |
| | மாச்சு | -2.3 | -1.5 | -1.9 | -0.6 | -2.0 | -2.2 | 9.9 | 5.5 | 7.0 | 6.9 | 5.9 | 8.2 |
| | ஏப்பிறல் | -0.8 | -0.3 | -0.6 | 0.6 | -1.4 | -1.1 | 9.9 | 5.1 | 6.7 | 6.9 | 5.1 | 7.6 |
| | மே | 2.4 | 0.1 | -1.4 | -0.8 | -0.1 | 0.5 | 9.5 | 4.8 | 6.0 | 6.6 | 4.3 | 6.8 |
| | யூன் | 1.3 | 0.5 | 0.5 | 0.8 | 0.3 | 0.5 | 9.0 | 4.4 | 5.3 | 6.2 | 3.5 | 6.1 |
| | யூலை | -1.8 | -1.3 | -0.9 | -2.8 | -3.2 | -1.1 | 8.3 | 3.9 | 4.6 | 5.4 | 2.4 | 5.4 |
| | ஓகத்து | -2.5 | -0.5 | -0.9 | -0.2 | -0.5 | -1.5 | 7.8 | 3.5 | 4.1 | 4.7 | 1.5 | 4.8 |
| | செத்தெம்பர் | 0.3 | -0.4 | 0.3 | 0.0 | -0.9 | -0.1 | 7.6 | 3.1 | 3.7 | 4.0 | 0.6 | 4.3 |
| | ஒத்தோபர் | -0.1 | 0.4 | 0.8 | 0.5 | 0.5 | 0.1 | 7.2 | 2.7 | 3.3 | 3.3 | -0.3 | 3.6 |
| | நவெம்பர் | 2.6 | 1.6 | 2.9 | 2.6 | 3.7 | 2.5 | 6.8 | 2.4 | 2.9 | 3.0 | -0.9 | 3.1 |
| | திசெம்பர் | 3.1 | 1.1 | 3.1 | 1.9 | 1.9 | 1.8 | 6.3 | 2.1 | 2.5 | 2.6 | -1.3 | 2.6 |
| 2004 | சனவரி | -0.2 | -0.3 | -1.1 | -0.2 | -0.1 | 0.2 | 5.2 | 1.6 | 1.9 | 2.0 | -1.6 | 1.9 |
| | பெப்புருவரி | -0.7 | 0.2 | 0.4 | 0.0 | 0.6 | 0.2 | 4.4 | 1.2 | 1.6 | 1.9 | -1.7 | 1.5 |
| | மாச்சு | -0.8 | -0.5 | -0.8 | -1.2 | -0.7 | -0.8 | 3.9 | 1.0 | 1.5 | 1.6 | -1.8 | 1.2 |
| | ஏப்பிறல் | 1.3 | 1.1 | 1.6 | 1.3 | 2.0 | 1.8 | 3.7 | 0.9 | 1.5 | 1.3 | -1.6 | 1.3 |
| | மே | 3.7 | 1.3 | 0.8 | 1.7 | 1.0 | 1.0 | 3.7 | 0.9 | 1.9 | 1.3 | -1.2 | 1.4 |
| | யூன் | 2.1 | 0.4 | 1.5 | 1.3 | 1.0 | 1.3 | 3.9 | 1.0 | 2.5 | 1.5 | -0.7 | 1.7 |
| | யூலை | 0.1 | 1.0 | 1.5 | 0.5 | 2.3 | 1.5 | 4.3 | 1.4 | 3.2 | 2.2 | 0.5 | 2.3 |
| | ஓகத்து | -1.1 | 0.2 | -0.8 | 0.2 | 0.0 | 0.8 | 4.9 | 1.8 | 4.0 | 2.9 | 1.7 | 3.1 |
| | செத்தெம்பர் | 1.3 | 2.1 | 2.1 | 1.9 | 1.6 | 3.1 | 5.4 | 2.5 | 4.9 | 3.8 | 3.2 | 4.1 |
| | ஒத்தோபர் | 0.4 | 0.7 | 1.6 | 1.5 | 0.5 | 0.8 | 6.1 | 3.3 | 5.9 | 4.9 | 4.7 | 5.4 |
| | நவெம்பர் | 3.4 | 2.8 | 2.8 | 2.4 | 2.0 | 2.9 | 6.8 | 4.0 | 6.9 | 5.7 | 5.9 | 6.6 |
| | திசெம்பர் | 3.7 | 2.9 | 4.6 | 3.3 | 2.7 | 2.9 | 7.6 | 5.0 | 8.0 | 6.6 | 7.2 | 7.9 |

மூலங்கள்: குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

குறைவான பங்கேற்பு வீதத்தைக் கொண்ட வடக்கு மாகாணத்தை உள்ளடக்கியமையால் வீழ்ச்சியடைந்தது. தொழில்நிலை வீதம், பொருளாதார செயற்பாட்டின் விரிவாக்கத்துடன் குறிப்பாக பணிகள் துறையின் விரிவாக்கத்துடன் சிறிதளவால் அதிகரித்தது. புதிய அரசின் கொள்கையின் கீழ் அரச துறை தொழில்நிலை வாய்ப்புக்களில் ஏற்பட்ட விரிவாக்கத்தாலும், அரச துறைக்கு பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்ளும் அதன் முயற்சியாலும் தொழில்நிலை வீதத்திற்கு அனுசரணை யளிக்கப்பட்டது. எனினும், தொழிலின்மை இவ்வாண்டில் மொத்த வீதத்தில் மிதமானதொரு அதிகரிப்பைப் பதிவு செய்தமை, முக்கியமாக படித்த இளைஞர்களிடையே கவனத்திற் கொள்ள வேண்டிய விடயமாக தொடர்ந்து விளங்கியது.

2004 திசெம்பர் 26 இல் கரையோரப் பகுதியின் பெரும்பகுதியை அழிவுக்குள்ளாக்கிய சுனாமி எனப்படும் ஆழிப்பேரலைப் பேரழிவானது உறுதிப்படுத்தப்பட்ட உயிரிழப்புக்கள் மற்றும் காணாமற் போனோரை கணக்கிற் கொள்கையில் 30,000 இலிருந்து 40,000 வரையான உயிர்களைப் பலியெடுத்தது. இத்துடன், கிட்டத்தட்ட 100,000 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டு அல்லது சேதப்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட அரை மில்லியன் மக்களை (குடித்தொகையின் 2-3 சதவீதம்) இடம்பெயரச் செய்தது. தொழிற்படை மீதான நேரடித் தாக்கமானது குறைந்த தொழிற்படை பங்கேற்பு வீதம் அல்லது அதிகரித்த தொழிலற்றோர் வீத வடிவில் 2005 இல் காணக்கூடியதாகவிருக்கும். அதேவேளை, வலுவான மீள்நிருமாணம் மற்றும் புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழிலாளருக்கான அதிகரித்த கேள்வியுடன் இந்நிலைமை மாற்றமடையலாம்.

விலைகள் மற்றும் கூலிகள் மீதான சுனாமிப் பேரழிவின் தாக்கமானது 2005 இல் குறிப்பிட்ட சில துறைகளில் உணரப்படலாம். மீன்பிடித்துறை மோசமாகப் பாதிக்கப்பட்ட துறைகளில் ஒன்றாக விளங்குகிறது. மீனின் விலைகள் தற்காலிகமான குறைந்த கேள்வி காரணமாக உடனடியாக அதிகரிக்கவில்லையாயினும் பின்பு கேள்வி அதிகரித்ததைத் தொடர்ந்து அதிகரித்தன. வழங்கலிலான பற்றாக்குறையானது தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் மீள ஏற்படுத்தப்படும்வரை தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, ஏனைய பதிலீட்டு புரதச்சத்துக்களின் விலைகள் ஏற்கனவே அதிகரித்துள்ளன. பாதிப்புக்குள்ளான பிரதேசங்களிலான வர்த்தக நடவடிக்கைகளும் இடையூறுக்குள்ளாகியுள்ளன. இக்கரையோரப் பிரதேசங்களுக்கான சந்தைப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளிப்பு மீட்சியடைய சில காலம் செல்லுமாதலால் இப்பொருளாதார துறைகளிலான விலைகள் மற்றும் கூலிகளும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகியே காணப்படும். நடைமுறைப் படுத்தலைத் திட்டமிடுவதில் மூலவளங்களின் கிடைப்பனவில் ஏற்படும் மட்டுப்படுத்தல்களுக்கு உரிய கவனம் செலுத்தப்பட்டாலன்றி புனரமைப்பு மற்றும் மீள்நிருமாணச் செயற்பாடுகள் தேர்ச்சி பெற்ற தொழிலாளர் உட்பட்ட உள்ளீட்டு விலைகளில் அளவுக்கதிகமான அழுத்தத்தையும் ஏற்படுத்தக்கூடும்.

## 4.2 விலைகள்


### பொருட்கள் மற்றும் பணிகளின் விலை அசைவுகள்

இவ்வாண்டில், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் அதேபோன்று உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் என்பவற்றின் அநேகமானவற்றின் விலைகள் முன்னைய ஆண்டின் விலைகளுடன் ஒப்பிடுகையில் வேறுபட்ட வீதங்களில் அதிகரித்தன. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வேளாண்மைப் பொருட்களினுள், இவ்வாண்டின் முதல் அரைப்பகுதியில் குறிப்பிட்ட சில பொருட்களினது விலைகள் வீழ்ச்சியடைந்தபோதிலும் இரண்டாம் அரைப்பகுதியில் இவை மிக உயர்ந்த வீதங்களில் அதிகரித்து இவ்வாண்டிலான உற்பத்தி நிலைமையை பொதுவாக பிரதிபலிக்கின்றன. 2003 இல் அரிசி விலைகள், உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் 4 தொடக்கம் 12 சதவீத வீச்சினுள் வீழ்ச்சியடைந்திருக்கையில், 2004 இல் பெரும்போகம் (12 சதவீதம்) மற்றும் சிறுபோகம் (20 சதவீதம்) இரண்டினதும் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இவ்விலைகள் 15 தொடக்கம் 27 சதவீதம் வரை அதிகரித்தன. இரண்டாம் அரைப்பகுதியில் மாத்திரம் சகல வகை அரிசியினதும் விலைகள் 30 தொடக்கம் 46 சதவீத வீச்சினுள் அதிகரித்தன. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இன்னுமோர் முக்கிய நுகர்வுப் பொருளான தேங்காயின் விலைகள் மொத்த உற்பத்தி வீழ்ச்சியடைந்தபோதிலும் 2003 இன் விலை மட்டங்களைவிட 2004 இல் 2 சதவீதமளவால் வீழ்ச்சியடைந்தன. இப்பொதுவான விளைவானது இவ்வாண்டின் முதல் அரைப்பகுதியில் உற்பத்தி அதிகரித்து விலை 22 தொடக்கம் 23 சதவீத வீச்சினுள் வீழ்ச்சியடைந்து காணப்பட்டமையாலும் இரண்டாம் அரைப்பகுதியில் உற்பத்தி வீழ்ச்சியடைந்து விலை அதிகரிப்புக்கள் 25 தொடக்கம் 28 சதவீத வீச்சினுள் காணப்பட்டமையாலும் ஏற்பட்டதாகும். மரக்கறிகளின் விலைகள் கலப்பான போக்கினை பதிவு செய்தன. பெரும்போக மரக்கறி அறுவடையில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இவ்வாண்டின் ஆரம்பப் பகுதியில் விலைகள் பொதுவாக வீழ்ச்சியடைந்த போதிலும் பின்பு அதிகரித்தன. இவ்வாண்டில், புரதச்சத்து மூலங்கள், கடல் மற்றும் நன்னீர் மீனினதும் கருவாட்டினதும்

வேறுபட்ட வகைகள், இறைச்சி மற்றும் இறைச்சி உற்பத்திகளின் வேறுபட்ட வகைகள், உடன் பால், பாலை மூலப்பொருளாகக் கொண்ட பொருட்கள் மற்றும் முட்டை என்பவற்றின் விலைகள் 1 இலிருந்து 13 சதவீத வீச்சினுள் அதிகரித்தன. அரிசி மற்றும் தேங்காயைப் போலன்றி, புரதச்சத்து மூலங்களின் விலைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு முழுவதும் உயர்வாகவே காணப்பட்டன. உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பெரும்பாலும் அனைத்து வகையான பழங்களும் 2004 இல் உயர் விலைகளைப் பதிவு செய்தன. இவ்விலை அதிகரிப்புக்கள் கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்களின் குறிப்பிடத்தக்க தொடர்ச்சியாகும். புரதச்சத்து மூலங்களுக்கான அதிகரித்துச்செல்லும் கேள்வி மற்றும் அதிகரித்துச்செல்லும் உள்ளீடுகளின் செலவும் போக்குவரத்துச்செலவும் அவ்வாறான அபிவிருத்திகளுக்கு பங்களிப்புச் செய்திருக்கக்கூடும்.

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினுள், நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் ஆகிய இறக்குமதிகளின் மூன்று முக்கிய வகைகளிலும் விலை அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. நுகர்வுப் பொருட்கள் மற்றும் இடைநிலைப் பொருட்கள் ஆகிய இரண்டினதும் விலைகள் இவ்வாண்டினுள் பொதுவான விலைப் போக்குகளில் பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது. ஏனைய விலைகள் மீதான முதலீட்டுப் பொருட்களின் விலை அதிகரிப்புக்களின் தாக்கம் காலம்தாழ்த்தி உணரப்படும். முக்கிய உணவு இறக்குமதிகளினுள், ஐ.அ.டொலர் நியதிகளிலான கணிசமான விலை அதிகரிப்புக்கள் கோதுமைத்தானியம் (24 சதவீதம்), பால்மா (18 சதவீதம்), அரிசி (10 சதவீதம்) மற்றும் சீனி (10 சதவீதம்) என்பவற்றில் அவதானிக்கப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட பழங்களில் அநேகமான வற்றின் விலைகளும் இவ்வாண்டில் அதிகரித்தன.

வரைபடம் 4.2
**மாகாணங்களின்படி தெரிந்தெடுக்கப்பட்ட பண்டங்களின் சில்லறை விலைகள்**



அட்டவணை 4.2
**2002,2003, மற்றும் 2004 ஆம் ஆண்டில் நிருவகிக்கப்பட்ட விலைகளிலான திருத்தங்கள்**

| விடயம் | அலகு | விலை திசெ.2002 | விலை திசெ.2003 | விலை திசெ.2004 | % மாற்றம் 2003/2002 | % மாற்றம் 2004/2003 |
|---|---|---|---|---|---|---|
| தென்னஞ் சாராயம் | 750 மில்லி. லீற். | 285.00 | 300.00 | 338.50 | 5.3 | 12.8 |
| அதி விசேட சாராயம் | 750 மில்லி. லீற். | 241.00 | 260.00 | 290.00 | 7.9 | 11.5 |
| சாதாரண தபாலுக்கான கட்டணம் | ஒன்றுக்கு | 4.50 | 4.50 | 5.00 | 0.0 | 11.1 |
| டீசல் | ஒரு லீற்றர் | 30.00 | 32.00 | 44.00(a) | 6.7 | 37.5 |
| மண்ணெண்ணெய் | ஒரு லீற்றர் | 24.00 | 25.50 | 25.50 | 6.3 | 0.0 |
| பெற்றோல் | ஒரு லீற்றர் | 49.00 | 53.00 | 70.00(a) | 8.2 | 32.1 |
| உலை எண்ணெய் (1000) | ஒரு லீற்றர் | 23.50 | 23.20 | 24.70 | -1.3 | 6.5 |
| உலை எண்ணெய் (1500) | ஒரு லீற்றர் | 23.00 | 22.30 | 24.30 | -3.0 | 9.0 |
| உலை எண்ணெய் (3500) | ஒரு லீற்றர் | 21.50 | 20.70 | 22.00 | -3.7 | 6.3 |
| பேருந்துக் கட்டணம் | | | | | 0.0 | 15.0 |

(அ) கொழும்பு நகரவிலை, செத்தெம்பர் 2004இல் இருந்து மற்றைய இடங்களின் விலைகள் இதிலும் பார்க்க 2 ரூபா குறைவாக இருந்தது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இடைநிலைப் பொருட்களின் அதிகரிப்புக்களின் தாக்கம் விசேடமாக எரிபொருள் விலைகளின் தாக்கம் 2003 இனை விட 2004 இல் பெருமளவு அதிகரித்து காணப்பட்டது. ஒரு பீப்பா மசகெண்ணெய்யின் விலை 2003 இன் 17 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2004 இல் 27 சதவீதத்தால் அதிகரித்தது. திரவப் பெற்றோலிய வாயுவிற்கான ஒத்த அதிகரிப்புக்கள் 17 சதவீதமாகவும், 20 சதவீதமாகவும் விளங்கின. வளமாக்கி விலைகளும் முறையே 21 சதவீதத்தாலும், 17 சதவீதத்தாலும் அதிகரித்தன. ரூபாப் பெறுமானத் தேய்வுடன் இணைந்து பன்னாட்டு விலை அதிகரிப்புக்கள், உள்நாட்டு எரிபொருள் விலைகளை 0 இலிருந்து 38 சதவீத வீச்சு வரை அதிகரித்தன. சமையல் வாயுவின் விலைகளும் 11 இலிருந்து 12 சதவீதம் வரை அதிகரித்தன. இவ்விலை அதிகரிப்புக்கள் இவற்றை முக்கிய உள்ளீடுகளாக பயன்படுத்தும் போக்குவரத்து மற்றும் ஏனைய துறைகள் மீது இரண்டாம் நிலைத் தாக்கத்தைக் கொண்டிருந்தன. இதன்படி, பேரூந்துக் கட்டணங்கள், புகையிரதக் கட்டணங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள், வான் போன்ற ஏனைய போக்குவரத்து வகைகள் மீதான கட்டணங்களும் இவ்வாண்டில் அதிகரித்தன.

உணவு பதனிடலுக்கான இடைநிலை உள்ளீடுகளின் விலைகளும் தயாரிக்கப்பட்ட உணவின் விலைகளில் தாக்கத்தைக் கொண்டிருந்தன. இதன்படி பாண் மற்றும் மாவை அடிப்படையாகக் கொண்ட பொருட்களின் விலைகள் 3 சதவீதமளவில் அதிகரித்தன. பல்வகையான தயாரிக்கப்பட்ட உணவுகளின் விலைகள் 4 தொடக்கம் 10 சதவீத வீச்சில் விலை அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. ஆண்டினிறுதியில் அதிகரித்துச் செல்லும் பணவீக்கத்தின் இணைந்த விளைவைப் பிரதிபலிக்கின்ற வகையில் உணவல்லாத பொருட்களிடையே, விசேடமாக பிரத்தியேக தனியார் வகுப்புக்கள் மற்றும் மருத்துவ ஆலோசனைக் கட்டணங்களை உள்ளடக்கிய வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் பணிகளுக்கான விலையில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

### மாகாண ரீதியான விலை வேறுபாடுகள்

மாகாணங்களிடையே விலைகளில் காணப்படும் வேறுபாடுகள் பொருட்களின் கிடைப்பனவு மற்றும் அவற்றின் தர வித்தியாசங்களில் உள்ள வேறுபாடுகள் காரணமாக ஏற்படுகின்றன. மறுபுறத்தில் கிடைப்பனவானது உற்பத்தி செய்யப்படும் பிரதேசத்திலும், பகிர்ந்தளிப்பின் வினைத்திறனிலும் தங்கியிருக்கும். விலை அதிகரிப்புக்களின் பொதுவான போக்கினுள், வேறுபட்ட அளவுகளில் பிராந்திய விலை வேறுபாடுகள், பலவகைப்பட்ட பொருட்களில் அவதானிக்கப்பட்டன. அரிசி, உருளைக்கிழங்கு, செத்தல்மிளகாய், தேங்காய் மற்றும் முட்டைக்கான வேறுபாட்டுக் குணகப் பெறுமதிகள் (வே.கு)[1] 5 சதவீதத்திற்குக் கீழ் காணப்பட்டன. பெரிய வெங்காயம், கத்தரிக்காய் மற்றும் மீனுக்கான இவ்வேறுபாட்டுக் குணகம் 10 சதவீதத்திற்கும் மேல் காணப்பட்டன. இதன்படி விரைவில் பழுதடையக்கூடிய பொருட்கள் தர வேறுபாடுகளுக்குள்ளாவதால் உயர்ந்த வேறுபாட்டுக் குணகங்களைக் கொண்டிருந்தன. முன்னைய ஆண்டுகளின் குணகங்களுடன் 2004 இன் வேறுபாட்டுக் குணகங்களை ஒப்பிடுகையில், பொது விலைமட்டங்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு மத்தியிலும் முக்கிய நுகர்வுப் பொருட்களின் விலைகளிடையேயான பிராந்திய வேறுபாடு மேலும் ஒடுங்கியதை எடுத்துக்காட்டியது. போர்நிறுத்தம் தொடர்ந்து காணப்படுதல், பிராந்தியங்களுக்குள்ளேயான வீதி வலை அமைப்புக்களிலான

முன்னேற்றம் காரணமாக பகிர்ந்தளிப்பு வழிமுறைகளில் ஏற்பட்ட முன்னேற்றம், பொருட்களை கொண்டுசெல்லும் வாகனத் தொகுதிகளில் ஏற்பட்ட விரிவாக்கம் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் வசதிகளில் ஏற்பட்ட விரிவாக்கத்துடன் சந்தை நிலைமைகள் பற்றிய நேரம் பிந்தாத தகவல் என்பன அண்மைக் காலத்தில் இம்மேம்பாடுகளுக்குப் பங்களிப்புச் செய்தன.

## நுகர்வோர் விலைச்சுட்டெண்கள்

கடந்த இரு ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட தொடர்ச்சியான மிதமான பணவீக்கத்தைத் தொடர்ந்து இரண்டாம் காலாண்டில் அதிகரிப்பதற்கு முன்பாக கிடைக்கத்தக்கதாகவுள்ள சகல நுகர்வோர் விலைச் சுட்டெண்களாலும் பதிவு செய்யப்பட்ட வீழ்ச்சியடைந்துசெல்லும் பணவீக்கத்துடன் 2004 ஆம் ஆண்டு தொடங்கியது. இப்போக்கானது சகல நுகர்வோர் விலைச் சுட்டெண்களிடையேயும் ஒரே மாதிரியாக அமைந்து 2004 இன் இரண்டாம் அரைப் பகுதியில் அதிகரித்துச்சென்ற விலை அழுத்தத்தை வெளிப்படுத்தியது.

மொத்தப் பணவீக்கத்தில் முக்கிய ஆதிக்கத்தினை செலுத்துவனவாக மொத்த நுகர்வுச் செலவினத்தில் ஏறத்தாழ 75 சதவீதத்தைக் கொண்டிருக்கும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விளங்கியதுடன் இதில் உணவுப் பொருட்கள் ஆதிக்கஞ் செலுத்தின[2]. உணவுப் பொருட்களை முக்கியமாகக் கொண்ட இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் நுகர்வுச் செலவினத்தின் எஞ்சிய 25 சதவீதத்திற்கு நேரடியாக வகைகூறின. குறிப்பாக இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் தொடர்ச்சியாக காணப்பட்ட உயர் விலை அழுத்தமானது சகல நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் மொத்த நிறையிலும் கிட்டத்தட்ட 60 சதவீதத்தைக் கொண்டிருக்கும் உணவின் விலைகளில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பால் முக்கியமாக ஏற்பட்டது. எனவே, பன்னாட்டு பண்ட விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் 2004 இல் உள்நாட்டு பணவீக்கத்திற்குப் பங்களிப்புச் செய்தது. எனவே இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினதும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களினதும் விலை அதிகரிப்புக்கள் இவ்வாண்டின் மொத்தப் பணவீக்கத்துக்கு பங்களிப்பும் செய்தன. பொதுவாக இறக்குமதி விலைகளிலேற்பட்ட அதிகரிப்புக்கு மத்தியிலும் இவ்வாண்டின் ஆரம்பத்தில் அநேகமான வேளாண்மைப் பொருட்களின் விலைகள் சார்புரீதியில் குறைவாக இருந்தமையே இவ்வாண்டு தொடக்கத்திலான குறைவான பணவீக்கத்துக்கு பொறுப்பான முக்கிய காரணியாக விளங்கியது. 2004 சனவரியிலிருந்து, இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்கள் மீது பிரயோகிக்கப்படும் பெறுமதி கூட்டல் வரி 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு திருத்தப் பட்டமையானது பெரும்பாலான இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களின் விலைகள் மீது மேல்நோக்கிய தாக்கத்தைக் கொண்டிருந்தது. எனினும், அதிகரித்துச் செல்லும் பண்டங்களின் பன்னாட்டு விலைகளின் தாக்கம், குறிப்பாக மசகெண்ணெய்யின் அசாதாரணமான உயர் விலைகளின் நேரடி மற்றும் உள்ளீட்டுச் செலவுகளூடான தாக்கம் அதன் பின்னரான உள்நாட்டுப் பணவீக்கத்தில் தெளிவாக காணப்பட்டதுடன், இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து கீழ்நோக்கிய பணவீக்கப் போக்கை நேர்மாறாக்கியதற்கு பகுதியளவில் பொறுப்பானதாகவும் விளங்கியது.

சுட்டெண்களின் மாதத்துக்கு மாத மாற்றங்கள், இவ்வாண்டின் பெரும்பாலான மாதங்களில் அவை வரலாற்று ரீதியான பருவகால மாற்றங்களைவிட உயர்வாகக் காணப்பட்டமையால் விலைகள் மீது மேல்நோக்கிய அழுத்தத்தை எடுத்துக்காட்டின. 2004 முழுவதும் தொடர்ச்சியாக அதிகரித்த புள்ளிக்குப்புள்ளி மாற்றங்கள் (ஏதாவதொரு மாதத்தின் சுட்டெண்ணிலான மாற்றத்தை முன்னைய ஆண்டின் ஒத்த மாதத்திலான சுட்டெண் பெறுமதியுடன் ஒப்பிடும் அளவீடு) இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் உயர்ந்து விளங்கியதுடன் இக்காலப்பகுதியில் அநேகமான சுட்டெண்களை விட 10 சதவீதத்திற்கும் கூடுதலாகக் காணப்பட்டன. இவ்வாண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் விரைந்து அதிகரித்த விலைகள் மீதான அழுத்தமானது முன்னைய ஆண்டின் ஒத்த மாதங்களிலான புள்ளிக்குப்புள்ளி அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் கணிசமாக உயர்வடைந்த புள்ளிக்குப்புள்ளி அதிகரிப்புக்களால் எடுத்துக் காட்டப்பட்டது. இதன் விளைவாக, சகல நுகர்வோர் விலைச்சுட்டெண்களும் முன்னைய ஆண்டின்-1 இலிருந்து 6 சதவீத பணவீக்க வீதங்களுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் இறுதியில் சார்புரீதியில் உயர்வடைந்த அதிகரித்துச்செல்லும் ஆண்டுச் சராசரி பணவீக்க வீதங்களான 5 இலிருந்து 8 சதவீதமான வீச்சைப் பதிவு செய்தன.

---

1. வேறுபாட்டுக் குணகம் என்பது குறிக்கப்பட்ட பொருளொன்றின் சராசரி பெறுமதிக்கான அப்பொருளின் பெறுமானத்தின் சராசரி வேறுபாட்டினை அளவிடும் ஒரு புள்ளிவிபரவியல் முறையாகும். இதன்படி, குறைந்த வேறுபாட்டுக் குணகம் குறைந்த வேறுபாட்டினையும் கூடிய வேறுபாட்டுக் குணகம் கூடிய வேறுபாட்டினையும் எடுத்துக் காட்டுகிறது. முக்கிய சந்தைகளிடையேயான சார்பளவு விலை வேறுபாடுகளை பகுப்பாய்வு செய்வதற்கு இப்புள்ளிவிபரத்தை பயன்படுத்த முடியும்.

---

2. இறக்குமதி செய்யப்பட்ட இடைநிலை உள்ளீடுகளில் பெருமளவில் தங்கியிருக்கும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விலைகளும் இறக்குமதி விலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு இசைவாக விளங்கும்.


வாழ்க்கைச் செலவின் அலுவல்சார் அளவீடான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 2002 சனவரியின் பின்னரான அதன் ஆகக்குறைந்த வருடாந்த சராசரி மாற்றமான 3.7 சதவீதத்தை மேயில் அடைந்து, அதன் பின்பு ஆண்டின் இறுதியளவில் 7.6 சதவீதத்தை அடைந்தது. பரந்த பூகோளப் பரப்பளவையும், நாடு முழுவதும் விலை அசைவுகளைப் பிரதி நிதித்துவப்படுத்தும் வருமானத் தொகுதியினரின் பெருமளவை உள்ளடக்குவதும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை காட்டிலும் மிக அண்மைய நிறைகளைக் கொண்டுள்ளதும் அதனையொத்த போக்கினை கொண்டதுமான இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் இவ்வாண்டு தொடக்கத்தில் பெருமளவு வீழ்ச்சியடைந்து, மார்ச்சில் அதன் ஆகக் குறைந்த வருடாந்த சராசரி மாற்றமான 1.2 சதவீதத்தை அடைந்து, அதன் பின்னர் 2004 இறுதியளவில் 7.9 வீதத்தை அடைந்தது. முன்னைய ஆண்டில் இதனையொத்த பணவீக்க வீதங்கள் முறையே 6.3 சதவீதமாகவும், 2.6 சதவீதமாகவும் விளங்கின.

பலதரப்பட்ட நுகர்வுச் செலவினத் தொகுதி களின் விலை அசைவுகளைப் பிரதி நிதித்துவப்படுத்தும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் துணைச் சுட்டெண்களிடையே, உணவு மற்றும் நானாவிதப் பொருட்கள் முன்னைய ஆண்டின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் உயர்வான ஆண்டுச் சராசரி அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கூடையில் கிட்டத்தட்ட 62 சதவீதம் கொண்ட ஆகக்கூடிய பங்கைக் கொண்டிருக்கும் உணவுத் துணைச்சுட்டெண் 2003 இல் பதிவு செய்யப்பட்ட 6 சதவீத அதிகரிப்பைக் காட்டிலும் உயர்வான 8 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பைப் பதிவு செய்தது. இதுபோலவே, இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் 71 சதவீத நிறை யைக் கொண்டிருக்கும் உணவு துணைச் சுட்டெண் 2003 இல் பதிவு செய்யப்பட்ட வருடாந்த அடிப்படையிலான 1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட 9 சதவீதத்தால் அதிகரித்தது. உணவு விலைகளிலிருந்தான அழுத்தத்திலேற்பட்ட அதிகரிப்பினை முன்னைய ஆண்டின் 4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2004 இல் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் உணவுத் துணைச் சுட்டெண்ணிலேற்பட்ட 16 சதவீதம் கொண்ட புள்ளிக்குப் புள்ளி அதிகரிப்பு எடுத்துக்காட்டியது. இப்போக்கானது இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும், தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டது. இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் உணவு துணைச் சுட்டெண், 2003 இல் பதிவு செய்யப்பட்ட ஏறத்தாழ 1 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் புள்ளிக்குப்புள்ளி அடிப்படையில் 20 சதவீதத்தால் அதிகரித்தது. இதனால், தொடர்பான சுட்டெண்கள், மொத்த பணவீக்கத்திற்கான உணவு விலைகளின் பங்களிப்பு முன்னைய ஆண்டிற்கான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கான 67 சதவீதத்துடனும் இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் 40 சதவீதத்திற்குக் குறைவானதுடனும் ஒப்பிடுகையில் 2004 இல் 70 சதவீதத்தை விட கூடியதாக இருந்ததை எடுத்துக் காட்டின.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கூடையில் கிட்டத்தட்ட 4 சதவீதமான பங்கைக் கொண்டிருக்கும் எரிபொருள் மற்றும் வெளிச்சம் துணைச் சுட்டெண், 2003 இன் 15 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட 10 சதவீதம் கொண்ட அதிகூடிய ஆண்டுச் சராசரி அதிகரிப்பைப் பதிவு செய்தது. மொத்தப் பணவீக்கத்திற்கான எரிபொருள் மற்றும் வெளிச்சம் வகையின் பங்களிப்பு 2003 இன் 19 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 11 சதவீதமாக விளங்கியது. இவ்வாண்டில் மண்ணெண்ணெய்யின் விலை அதிகரிக்கப்படாததால், இவ்அதிகரிப்பானது முக்கியமாக விறகின் உயர் விலைகளிலேயே விளைவிக்கப்பட்டது. திரவப் பெற்றோலிய வாயு போன்ற மாற்று எரிபொருள் மூலங்களின் விலை அதிகரிப்புக்களை தொடர்ந்து குடியிருப்பாளர்கள் சிறு அளவிலான உணவகங்கள் மற்றும் உடன் உணவு நிலையங்களிலிருந்தான அதிகரித்த கேள்வியின் காரணமாக விறகின் விலைகள் அதிகரித்திருக்கலாம். 13 சதவீத நிறையினை கொண்ட இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் தொடர்பான துணைச்சுட்டெண் இவ்வாண்டில் ஏற த்தாழ சார்பளவில் குறைந்த வீதமான 6 சதவீதத்தால் உயர்வடைந்தது. விறகு விலைகளுக்கு மேலதிகமாக 0.2 சதவீத சிறிதளவு பங்கைக் கொண்டிருக்கும் திரவப் பெற்றோலிய வாயுவின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினை பிரதிபலித்தது. மொத்த பணவீக்கத்துக்கான இத்துறையின் தொடர்பான பங்களிப்பு 2004 இல் ஏறத்தாள 10 சதவீதமாகக் காணப்பட்டது.

மசகெண்ணெய் மற்றும் வாயுவின் பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் இதன் விளைவாக உள்நாட்டு எரிபொருளின் விலைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டமை என்பன போக்குவரத்துக் கட்டணங்களின் அதிகரிப்புக்கு இட்டுச்சென்றன. இது, முன்னைய ஆண்டின் 8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆகக்கூடிய வருடாந்த அதிகரிப்பான 11 சதவீதத்தைக் கொண்டிருக்கும் இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் போக்குவரத்து துணைச் சுட்டெண்ணில் தெளிவாக பிரதிபலிக்கப்பட்டது. சுட்டெண்ணில் 4 சதவீத

வரைபடம் 4.3
**விலைச் சுட்டெண்களில் புள்ளிக்குப் புள்ளி மாற்றல்கள்**




செலவினப் பங்கைக் கொண்டிருக்கும் இத்துணைச் சுட்டெண் 2004 இல் மொத்த பணவீக்கத்தில் ஏறத்தாழ 5 சதவீதத்திற்குப் பொறுப்பாக இருந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மண்ணெண்ணெய் விலைகளின் திருத்தங்களைத் தவிர்த்து எரிபொருள் விலை அதிகரிப்புக்களின் மறைமுகத் தாக்கத்தை மட்டும் எடுத்துக் காட்டுகிறது. எனினும், இது பல்வகைத் துணைச்சுட்டெண்ணில் உள்ள பேருந்துக் கட்டணங்களை உள்ளடக்குகிறது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் 19 சதவீத நிறையைக் கொண்டிருக்கும் பல்வகை துணைச் சுட்டெண் இவ்வாண்டில் விளைவிக்கப்பட்ட பணவீக்கத்தின் 14 சதவீதத்திற்குப் பொறுப்பாக இருந்தது.

இரண்டு நுகர்வோர் விலைச்சுட்டெண்களிலும் முறையே 4 சதவீத, 9 சதவீத சார்புரீதியான பங்குகளைக் கொண்டிருக்கும் ஆடைகள் துணைச் சுட்டெண்கள் இவ்வாண்டில் 5 சதவீதத்திற்கும் குறைவாகவே அதிகரித்தன. இவ்வகையிலிருந்து சார்புரீதியில் குறைவான விலைத்தாக்கம் காணப்பட்டதுடன், பணவீக்கத்துக்கான இதன் பங்களிப்பு 4 சதவீதத் திற்கும் குறைவாகவே காணப்பட்டது.

இலங்கை நுகர்வோர் சுட்டெண்ணில் நலமும் பொழுதுபோக்கு மற்றும் களியாட்டக் கலாச்சாரத் துணைச் சுட்டெண்கள் 2004 இல் முறையே 10 சவீதத்தாலும், 8 சதவீதத்தாலும் அதிகரித்தன. இவை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அதிகரிப்புக்களை விட உயர்வானதாகும். நலத்துறை மீதான அதிகரித்த செலவினம் இவ்வாண்டில் மொத்த விலை மட்டத்தின் அதிகரிப்பில் 5 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில், பின்னைய வகை சிறிதளவிற்கு பங்களிப்புச் செய்தது. 2004 இல் கூட்டு விலை மட்டத்தில் ஏனைய துணைச் சுட்டெண்களின் தாக்கம் சிறிதளவாகவே காணப்பட்டது.

### பிராந்திய விலைச் சுட்டெண்கள்

மத்திய வங்கியானது, பல்வேறுபட்ட பிராந்தியங்களின் வாழ்க்கைச் செலவை கொழும்பு, அநுராதபுரம், மாத்தளை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்காக கணிக்கப்படும் பிராந்திய நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் அசைவுகள் மூலம் அளவிடுகிறது. இந்நான்கு சுட்டெண்களால் அளவிடப்பட்டவாறு, பிராந்திய மட்டத்திலான விலைகள் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை ஒத்த போக்கினை வெளிக்காட்டின. பணவீக்கத்திலான தொடர்ச்சியான அதிகரிப்பு, குறிப்பாக இரண்டாம் அரைப்பகுதியில் அதன் வருடாந்த சராசரி பணவீக்க வீதங்களை ஆண்டினிறுதியில் 5 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கிடையில் உயர்வடையச் செய்தது. இது 2003 இறுதியில் பிராந்தியங்களுக்கிடையேயான இதனையொத்த வீச்சான 1 இலிருந்து 3 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கதாகும். புள்ளிக்குப்புள்ளி மாற்றங்களும் அதே போக்கை எடுத்துக்காட்டி, குறிப்பாக இரண்டாம் அரைப்பகுதியில் 2003 இனை விட மிகவும் அதிகரித்துக் காணப்பட்டன. பிராந்தியங்களுக்கிடையேயான விலை வேறுபாடுகள் முன்னைய பிரிவில் கலந்துரை யாடப்பட்டவாறு பல காரணிகளின் காரணமாக ஏற்பட்டது. முக்கியமாக உணவு விலைகளிலிருந்து எழும் பணவீக்கமானது விலை வேறுபாடுகள் மற்றும் சுட்டெண்களின் நிறை அமைப்பிலான வேறுபாடுகள் காரணமாக பிராந்தியங் களிடையே வேறுபட்ட பரிமாணங்களில் காணப்பட்டது. கொழும்பு மாவட்டத்துடன் ஒப்பிடுகையில் பணவீக்க வேறுபாடானது ஏனைய மாவட்டங்களில் அதிகரித் திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், இது போக்கு வரத்து மற்றும் பகிர்ந்தளிப்பு வசதிகளிலான வேறுபாடுகளை முக்கியமாக பிரதிபலித்தது.

அதிகரித்த இறக்குமதிகள், குறிப்பாக 2004 இன் குறைந்த உற்பத்தியைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அரிசி இறக்குமதிகள் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஏனைய வேளாண்மைப் பண்டங்கள் என்பன தொடர்ந்து பிரதான மொத்த விற்பனை மற்றும் சில்லறைச் சந்தையாக விளங்கும் கொழும்பிலிருந்தே பெரும்பாலும் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவ்வாண்டிலும் அதிகரித்த போக்குவரத்துச் செலவுடன், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் கொழும்புக்கு வெளியேயான பிரதேசங்களை சென்றடையும்போது விலைகள் மேலும் அதிகரித்தன. பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்களின்

விரிவாக்கத்துடன் பிராந்தியங்களிடையேயான விலை வேறுபாடுகள் குறைவாக காணப்பட்டபோதிலும், உற்பத்தி வீழ்ச்சியடையும் காலங்களிலும் ஏனைய செழிப்பான உற்பத்திக் காலங்களிலும் ஏனைய பிராந்தியங்களுடன் ஒப்பிடுகையில் கொழும்பில் முக்கிய வேளாண்மைப் பொருட்கள் பெருமளவில் கிடைக்கத்தக்கதாக இருப்பது இப்பிராந்திய வேறுபாடுகளை மேலும் அதிகரிக்கலாம். 2002 மற்றும் 2003 இல் குறைவடையும் போக்கைக் கொண்டிருந்த பணவீக்கம் 2004 இல் விரைவாக அதிகரித்து, கொழும்பு மாவட்டத்துடனும் கொழும்பு மாநகரசபைப் பகுதியுடனும் (கொ.நு.வி.சு) ஒப்பிடுகையில் ஏனைய 3 மாவட்டங்களிலும் நாடு முழுவதிலும் (இ.நு.வி.சு) பெருமளவு அதிகரித்துக் காணப்பட்டன. இது 2004 இன் இரண்டாம் அரைப்பகுதியில் முக்கியமாக காணப்பட்டது.

### மொத்த விற்பனை விலைச்சுட்டெண்

சில்லறை மட்டத்திலான சாத்தியமான எதிர்கால விலை அசைவுகளின் முன்னணிக் குறிகாட்டியாக செயற்படுவதன் மூலம் மொத்த விற்பனை விலைச்சுட்டெண் முதன்மைச் சந்தை மட்டத்திலான விலை அசைவுகளை உள்ளடக்கி பொதுவான விலை மட்டங்களில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுவதில் கிடைக்கத்தக்க நுகர்வோர் விலைச்சுட்டெண்களை பூரணப்படுத்துகின்றது. பொதுவான சுட்டெண்ணை விட, அவற்றின் உற்பத்தி இடத்தை அடிப்படையாகக் கொண்டு உள்நாடு, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வகைப்படுத்தல்களின் கீழ் தனித்தனியான துணைச் சுட்டெண்கள் கணிக்கப்பட்டன. நுகர்வோர், இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் பயன்பாட்டின் படியான துணைச் சுட்டெண்களும் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.

இவ்வாண்டில் மொத்த விற்பனைச் விலைச்சுட்டெண்ணின் அசைவுகள் சில்லறை விலைகளின் போக்கை பெருமளவு ஒத்ததாக ஆனால் அதனை விட ஓரளவு முந்திக் காணப்பட்டதன் மூலம் எதிர்கால சில்லறை விலை மாற்றங்களை முன்கூட்டியே எதிர்வு கூறியது. மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணால் அளவிடப்படும் ஆண்டுச் சராசரி பணவீக்க வீதம் 2003 இன் 3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2004 இல் 12.5 சதவீதமாக அதிகரித்து காணப்பட்டதுடன், புள்ளிக்குப்புள்ளி மாற்றங்களால் அளவிடப்படும் சுட்டெண்ணிலான அதிகரிப்பானது 2004 இன் இரண்டாம் அரைப்பகுதியில் குறிப்பிடத் தக்களவில் அதிகரித்துக் காணப்பட்டது. மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணின் பல்வேறுபட்ட துணை வகைகளின் விலை அசைவுகள் இக்காலப்பகுதியில் கிடைக்கத்தக்கதாகவிருந்த நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் ஒப்பிடத்தக்க வகைகளின் போக்குடன் பெருமளவு ஒத்துக் காணப்பட்டன. சார்பு ரீதியில் தாழ்ந்த கேள்வி நெகிழ்ச்சியைக் கொண்ட முக்கிய பொருட்களை பிரதானமாகக் கொண்டிருக்கும் 68 சதவீத அதியுயர்ந்த நிறையைக் கொண்டதாக உணவு துணை வகை விளங்குவதுடன் அவற்றின் விலைகள் பெரும்பாலும் வழங்கல் பக்கத்துக் காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றன. குறிப்பாக அரிசியில் குறைந்த அறுவடையை விளைவித்த வரட்சி நிலைமைகள், மற்றும் ஊகரீதியான அழுத்தங்களுக்கு இட்டுச்சென்ற இறக்குமதிகளின் தாமதம் என்பன உயர் விலைகளை விளைவித்தன. இதனால், இது ஏனைய உணவுப் பொருட்களில் அதிகரிப்பை ஏற்படுத்திய காரணியாகவும் விளங்குகிறது. இதனால், உணவுச் சுட்டெண் முன்னைய ஆண்டின் வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2004 இல் கிட்டத்தட்ட 12 சதவீதத்தால் அதிகரித்தது. துணை வகையிலான அதிகரிப்பானது இவ்வாண்டில் நுகர்வோர் விலைச்சுட்டெண் பணவீக்கத்தின் அதிகரிப்புக்கு துணைபுரிந்த அதே காரணிகளைப் பிரதிபலித்தது. கலால் தீர்வையில் ஏற்பட்ட அதிகரிப்பைத் தொடர்ந்து இவ்வாண்டில் பல தடவைகளில் வெறியக் குடிவகைகளின் விலைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. இதன் விளைவாக வெறியக் குடிவகைகள் துணைச் சுட்டெண் 2003 இன் 3 சதவீதத்திற்கெதிராக 11 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. எண்ணெய்யின் பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக, மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணின் உணவல்லாத முக்கிய துணைவகை 2003 இன் 9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 15 சதவீதத்தால் அதிகரித்தது. ஆரம்பத்தில் எண்ணெய் விலை அதிகரிப்பை அரசு உள்வாங்கிய போதிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களுக்கான குறிப்பாக பெற்றோல் மற்றும் டீசலின் விலைகளை முறையே 32 சதவீதத்தாலும், 37.5 சதவீதத்தாலும் உயர்த்தியதன் மூலம் பகுதியளவில் மேற்கொள்ளப்பட்ட விலைச் சீராக்கமானது பொருளாதாரத்தின் ஏனைய பல விலைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. அதிகரித்த பன்னாட்டு இறப்பர் விலைகள் காரணமாக 2004 இல் ஊர்தி ரயர்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, 2004 இல் போக்குவரத்துக் கருவி துணைச் சுட்டெண்ணில் கிட்டத்தட்ட 6 சதவீதம் கொண்ட உயர் சராசரி வருடாந்த அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணியாக விளங்கியது. 2004 இல் பல்வகை துணைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளாக இறப்பர் மற்றும் புகையிலையின் அதிகரித்த விலைகள் விளங்கின.

அட்டவணை 4.3

**விலைச் சுட்டெண்களிலான மாற்றங்கள்**

| சுட்டெண் | சராசரிச் சுட்டெண் | | | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2002 | 2003 | 2004 | திசெ.03 | திசெ.04 | 2003 | 2004 |
| கொநுவிசு | 3,176.4 | 3,377.0 | 3,632.8 | 5.0 | 13.8 | 6.3 | 7.6 |
| கொமாநுவிசு | 138.5 | 141.1 | 148.5 | 1.1 | 12.6 | 2.1 | 5.0 |
| அநுவிசு | 143.1 | 146.6 | 158.4 | 2.1 | 15.0 | 2.5 | 8.0 |
| மாத்தளை நுவிசு | 138.5 | 142.1 | 151.6 | 2.5 | 13.5 | 2.6 | 6.6 |
| மாத்தறை நுவிசு | 139.1 | 127.3 | 147.2 | -1.3 | 13.6 | -1.3 | 7.2 |
| இநுவிசு | 154.4 | 158.4 | 170.9 | 1.0 | 16.8 | 2.6 | 7.9 |
| மொவிசு | 1,628.9 | 1,679.1 | 1,889.0 | 3.4 | 23.9 | 3.1 | 12.5 |
| **மொ.உ.உ சுருக்கி** | **160.0** | **168.0** | **183.5** | பொ.அ. | பொ.அ. | **5.0** | **9.2** |

பொ.அ. - பொருத்தம் அற்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கட்டடவாக்கத் துறையில் ஏற்பட்ட அதிகரித்த செயற்பாடு மற்றும் அதிகரித்த போக்குவரத்துக் கட்டணங்களால் முக்கியமாக சீமெந்து, செங்கற்கள் போன்ற அநேகமான கட்டிடப் பொருட்களின் விலைகளில் ஏற்படுத்தப்பட்ட அதிகரிப்பானது, 2004 இல் உலோகமல்லாப் பொருட்கள் தொகுதியில் ஏறத்தாழ 16 சதவீத அதிகரிப்பினை விளைவித்தது. உணவுப் பொருட்களால் ஆதிக்கம் செலுத்தப்படும் 50 சதவீதத்திலும் சிறிது கூடிய பங்கைக் கொண்டிருக்கும் உள்நாட்டுத் தொகுதி, 2003 இன் 4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2004 இல் ஏறத்தாழ 10 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் அதிகரித்தது. இவ்வாண்டில் எரிபொருள் போன்ற இடைநிலைப் பொருட்களின் உயர் விலைகளால் முக்கியமாக உந்தப்பட்டு இறக்குமதிகள் தொகுதி 2003 இன் 12 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2004 இல் ஏறத்தாழ 10 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. 2003 இல் பதிவு செய்யப்பட்ட 3 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2004 இல் ஏறத்தாழ 17 சதவீதம் கொண்ட அதிகூடிய ஆண்டுச் சராசரி அதிகரிப்பைப் பதிவு செய்த ஏற்றுமதித் தொகுதியானது முக்கியமாக தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு போன்ற பெருந்தோட்டத்துறைப் பயிர்களுக்கான கவர்ச்சிகரமான ஏற்றுமதி விலைகளைப் பிரதிபலித்தது.

பொருட்களின் பாவனை அடிப்படையிலான வகைப்படுத்தலின் கீழ், மொத்தச் சுட்டெண்ணில் 75 சதவீதத்திற்கும் மேலான பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ள நுகர்வுப் பொருட்கள் உணவுப் பொருட்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு, முன்னைய ஆண்டின் 1 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2004 இல் 11 சதவீதத்தால் அதிகரித்தன. இதுவும், இவ்வாண்டில் வேளாண்மைத் துறையின் மோசமான செயலாற்றத்தால் ஏற்பட்டதாகும். முதலீட்டுப் பொருட்கள் 2003 இன் 12 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 13 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்திருக்கையில் அதிகரித்த எரிபொருள் விலைகள் காரணமாக இடைநிலைப் பொருட்கள் 2003 இன் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி

மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியானது[3] மொத்த உள்நாட்டு உற்பத்தியை கணிப்பிடும் செயல்முறை மூலம் பெறப்பட்ட உட்கிடையானதொரு விலைக் குறிகாட்டியாகும். சுருக்கியானது, குறிப்பிட்ட தொரு ஆண்டின் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் அவ்வாண்டின் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்திக்குமிடையிலான விகிதமாகும். மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி பொருளாதாரத்தில் உற்பத்திச் செய்யப்படும் சகல பொருட்களையும் உள்ளடக்கிய கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், உற்பத்தியாளர் மட்டத்தில் பணவீக்கத்தை அளவிடுவதற்கு இது அடிக்கடி பயன்படுத்தப்படும் பரந்தளவான விலைச் சுட்டெண்ணாக விளங்குகிறது.

மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி, 2004 இல் ஏனைய விலைச் சுட்டெண்களால் எடுத்துக் காட்டப்பட்ட பணவீக்கத் தாக்கத்தை உறுதி செய்கிறது. மொத்தச் சுட்டெண் 2003 இன் 5.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 9.5 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வாண்டில் எதிர்கொள்ளப்பட்ட உற்பத்தியாளர் விலைகளிலான அதிகரிப்பும்

3. லஸ்பியரின் சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்ட மேலே கலந்துரையாடப்பட்ட ஏனைய விலைச்சுட்டெண்கள் போலன்றி மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி, தேசிய உற்பத்தியில் ஏற்படும் மாற்றத்துடன், ஒவ்வொரு வருடமும் மாற்றமுறும் நிறைகளைக் கொண்டிருக்கும் பாச்சே சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டது.

அட்டவணை 4.4
**மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி**

| துறை | சுட்டெண் | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2002 | 2003 | 2004 | 2003 | 2004 |
| வேளாண்மை | 165.8 | 168.5 | 182.8 | 1.6 | 8.5 |
| கைத்தொழில் | 157.9 | 167.5 | 185.8 | 6.1 | 10.9 |
| பணிகள் | 158.9 | 168.1 | 182.6 | 5.8 | 8.6 |
| மொஉஉ | 160.0 | 168.0 | 183.5 | 5.0 | 9.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அதேபோன்று முறை சார்ந்த மற்றும் முறைசாராத் துறைகளின் கூலி அழுத்தத்திலான அதிகரிப்பும் சுட்டெண்ணின் பொதுவான அசைவிற்கு பங்களிப்புச் செய்தன. துறைவாரியாகப் பார்க்கும்போது, பொருளாதாரத்தின் சகல மூன்று துறைகளிலும் அதிகரிக்கும் போக்கு அவதானிக்கப்பட்டது. இதற்கு மாறாக, வேளாண்மைத்துறை தாழ்ந்த மட்ட பணவீக்கத்தை வெளிக்காட்டிய வேளையில், ஏனைய இரு துறைகளிலும் பணவீக்கம் மிதமாகக் காணப்பட்டது. 2004 இல் வேளாண்மை உற்பத்தியாளர் விலைகள், உயர் உள்ளீட்டு செலவுகள் காரணமாக ஏனைய இரண்டு துறைகளின் விலைகளுக்கு சமாந்தரமாக அதிகரித்தன. 2004 இல் கைத்தொழில் துறை பெரும்பாலும் கட்டடவாக்கச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமக ஆகக்கூடிய அதிகரிப்பைப் பதிவு செய்தது.

## 4.3 கூலிகள்

இலங்கையில் கூலிகளை தொழில்நிலையின் இரண்டு முக்கிய வகைகளான அரச துறை மற்றும் தனியார் துறையின் கீழ் பகுப்பாய்வு செய்ய முடியும். தனியார் துறையானது முறைசார் தனியார் துறை, முறை சாராத் தனியார் துறை என இரு உபபிரிவுகளாக பிரிக்கப்படலாம். பொதுத்துறையும், அரசதுறை (மத்திய, மாகாண மற்றும் உள்ளூராட்சி துறைகள்) மற்றும் அரசுசார் துறையென (அரசக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள் மற்றும் அரச மேலாண்மைச் சபைகள்) இரு துறைகளாக பிரிக்கப்படலாம்.

அரச துறையின் கூலி அபிவிருத்திகள் மத்திய அரசில் உள்ள உயர் பதவியல்லாத தரங்கள் மற்றும் அரச பாடசாலை ஆசிரியர்களை மட்டும் உள்ளடக்கிய அலுவல்சார் கூலி சுட்டெண்கள் மூலம் கண்காணிக்கப்படுகின்றன. முறைசார் தனியார் துறையானது பொதுவான ஊழியர் சேம நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் தனியார் துறை நிறுவனங்களையோ அல்லது தொழில் ஆணையாளரின் ஒப்புதலுடன் அவர்களின் சொந்த சேம நிதியங்களைப் பேணும் தனியார் துறை நிறுவனங்களையோ உள்ளடக்குகிறது. முறைசார் கூலிகளிலான அசைவுகள் கூலிச்சபைகள் வர்த்தகங்களால் ஆளுகைக்குட் படுத்தப்படும் ஊழியர் வகைகளின் ஆகக்குறைந்த கூலி வகைகளை மட்டும் உள்ளடக்கும் ஆகக்குறைந்த கூலி வீதச் சுட்டெண்கள் மூலம் கண்காணிக்கப்படுகிறது. ஆகக்குறைந்த கூலிகள், இக்கூலிச்சபைகளின் தீர்மானங்களின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் ஆகிய மூன்று துறைகளுக்கும் தனித்தனியான கூலிவீதச் சுட்டெண்கள் தொழிற் திணைக்களத்தினால் கணிக்கப்படுகின்றன. திரண்ட கூலி வீதமொன்றும் மாதாந்த அடிப்படையில்

அட்டவணை 4.5
**கூலிவீதச் சுட்டெண்கள்**
**(திசெம்பர் 1978=100)**

| தொழிலாளர்களின் வகை | பெயரளவு | | | உண்மையான | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பெயரளவு | | உண்மையான | |
| | 2002 | 2003 | 2004(அ) | 2002 | 2003 | 2004(அ) | 2003 | 2004 (அ) | 2003 | 2004 (அ) |
| ***1. அரச ஊழியர்கள்*** | | | | | | | | | | |
| மத்திய அரச ஊழியர்கள் | 1,525.0 | 1,525.0 | 1,872.1 | 115.0 | 108.1 | 123.3 | 0.0 | 22.8 | -6.0 | 14.0 |
| நிறைவேற்றுத் தரமல்லாதோர் | 1,410.3 | 1,410.3 | 1,709.0 | 106.3 | 100.0 | 112.5 | 0.0 | 21.2 | -6.0 | 12.6 |
| சிற்றூழியர்கள் | 1,636.7 | 1,636.7 | 2,039.5 | 123.4 | 116.0 | 134.3 | 0.0 | 24.6 | -6.0 | 15.7 |
| அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் | 1,180.1 | 1,180.1 | 1,428.4 | 89.0 | 83.7 | 94.1 | 0.0 | 21.0 | -6.0 | 12.4 |
| **2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள்** | | | | | | | | | | |
| அனைத்து வர்த்தகத்திலுள்ள கூலி நிர்ணய சபை | 1,126.5 | 1,205.2 | 1,233.0 | 84.9 | 85.4 | 81.3 | 7.0 | 2.3 | 0.7 | -4.8 |
| வேளாண்மைத் தொழிலாளர்கள் | 1,269.6 | 1,382.2 | 1,397.7 | 95.6 | 98.0 | 92.2 | 8.9 | 1.1 | 2.5 | -5.9 |
| கைத்தொழில் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | 986.5 | 1,009.4 | 1,044.1 | 74.4 | 71.6 | 68.9 | 2.3 | 3.4 | -3.8 | -3.7 |
| பணிகளிலுள்ள தொழிலாளர்கள் | 678.0 | 678.0 | 751.0 | 51.1 | 48.1 | 49.5 | 0.0 | 10.8 | -6.0 | 2.9 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

கணிக்கப்படுகின்றது. முறைசாராத் தனியார் துறையின் கூலிகள் மீதான தகவல், மத்திய வங்கியின் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கீழ் சேகரிக்கப் படுகிறது.

### அரச துறை

அரச துறை ஊழியர்கள் இவ்வாண்டில் இரண்டு சம்பள மீளாய்வுகளைப் பெற்றனர். முதலாவது மீளாய்வு 2004.01.01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 10 சதவீத அதிகரிப்பு அல்லது ரூ.1,250 இவற்றில் எது கூடியதோ அது வழங்கப்பட்டது. இரண்டாவது மீளாய்வு 2004.12.01 இலிருந்து நடைமுறைக்கு வந்தது. இம்மீளாய்வானது மாதமொன்றுக்கு ஆகக் குறைந்தது ரூ.3,250 மற்றும் மாதமொன்றிற்கு ஆகக் கூடியது ரூ.9,000 என்ற நிபந்தனைக்குட்பட்டு தற்போதைய அடிப்படைச் சம்பளத்தில் 40 சதவீத அதிகரிப்பை வழங்கியது. புதிய சம்பளத் திட்டங்கள் இரண்டு கட்டங்களில் நடை முறைப்படுத்தப்படவிருந்தன. ரூ.2,500 அல்லது முன்மொழியப்பட்ட அதிகரிப்பின் 50 சதவீதத்தில் எது கூடியதோ அது 2004 திசெம்பரிலிருந்து வழங்கப்படவிருந்ததுடன் எஞ்சியது 2006 சனவரியிலிருந்து நிருவாகத்திற்கான தேசிய சபையின் விதந்துரைப்புக்களுக்கிணங்க 2006 சனவரியிலிருந்து வழங்கப்படும்.

இச்சம்பள மீளாய்வுகள், குறிப்பாக முதலாவது மீளாய்வு உயர் பதவியல்லாத அலுவலர்கள், சிற்றூழியர்கள் மற்றும் அரச பாடசாலை ஆசிரியர்களின் கூலிச் சுட்டெண்களை 2004 இல் பெயரளவு நியதிகளில் 21 சதவீதத்திலிருந்து 25 சதவீதம் வரையான வீச்சினுள் அதிகரித்தன. இதன்படி, அரச ஊழியர்களுக்கான மொத்தப் பெயரளவு கூலி வீதச் சுட்டெண் கிட்டத்தட்ட 23 சவீதத்தால் அதிகரித்தது. இவ்வாண்டின் நுகர்வோர் விலைச்சுட்டெண் பணவீக்கத்திற்கு சீராக்கம் செய்யப்படுகையில், இவ் அதிகரிப்புக்கள் அரச ஊழியர்களின் உண்மைக் கூலிகளை 12 சதவீதத் திலிருந்து 16 சதவீதமான வீச்சில் அதிகரித்ததுடன் மொத்த அதிகரிப்பு 14 சதவீதமாக விளங்கியது. எனினும், இச்சுட்டெண்கள் குறைந்த கூலி வகைகளின் கீழ் வரும் அரசதுறை ஊழியர்களின் கூலிகளை மட்டுமே பிரதி நிதித்துவப்படுத்துகிறது. இதன்படி, அவர்களில் பலர் 10 சதவீத அதிகரிப்பிற்கு பதிலாக தொகை கொடுப்பனவான ரூ.1,250 இனை பெற்றிருக்கக்கூடும். எனவே, 2004 இல் பெறுமான அரசதுறை கூலி அதிகரிப்பு, கூலிச் சுட்டெண்களால் எடுத்துக் காட்டப்பட்டதை விட குறைவானதாகவே இருந்திருக்கும்.

### முறைசார் தனியார் துறை

முறைசார் தனியார் துறையிலுள்ள மூன்று முக்கிய துறைகளான வேளாண்மை, கைத்தொழிலும் வர்த்தகமும் மற்றும் பணிகள் என்பவற்றிலான பெயரளவுக் கூலிகள், தொடர்பான ஆகக்குறைந்த கூலிச்சுட்டெண்களால் பிரதிபலிக்கப்பட்டவாறு, 2004 இல் 1 இலிருந்து 11 சதவீதம் வரையிலான வீச்சினுள் அதிகரித்தன. இத்துறை முழுமையாக 2.3 சதவீதம் கொண்ட பெயரளவுக் கூலி அதிகரிப்பைப் பெற்றது. பொதுவாக, முறைசார் தனியார் துறை ஊழியர்கள் அவர்களின் ஆகக் குறைந்த உண்மைக் கூலிகளில் இழப்பை எதிர்நோக்கினர். பணிகள் துறை ஊழியர்கள் மட்டுமே உண்மையான ஆகக்குறைந்த கூலி அதிகரிப்பைப் பெற்றனர். எனினும், ஆகக்குறைந்த விலைச்சுட்டெண்கள் இத்துறையின் முகாமைத்துவ மற்றும் தொழில்சார் வகையினரின் உழைக்கும் கூலிகளையும் வேறுபட்ட வடிவங்களில் பெறப்பட்ட ஏனைய நன்மைகளையும் உள்ளடக்காததன் காரணமாக பொதுவான நிலைமையானது இவ் ஆகக்குறைந்த கூலிச் சுட்டெண்களில் பிரதிபலிக்கப்பட்டதை விட வித்தியாசமானதாக இருக்கக்கூடும்.

### முறைசாராத் தனியார் துறை

முறைசாராத் துறையில் பெயரளவுக் கூலிகள் பெருமளவு சுதந்திரமான சந்தைச் சூழலில் நிர்ணயிக்கப்படுவதுடன் இது அதிகரித்துச்செல்லும் வாழ்க்கைச் செலவு, தற்போதைய சந்தை நிலைமைகள், வேலையிலுள்ள தொழிலாளர் செறிவின் அளவு, வேறுபட்ட தொழிற்பாடுகளிடையே நகர்வதற்கான மாற்றுச் சந்தர்ப்பங்கள் போன்ற பலதரப்பட்ட காரணிகளை கவனத்தில் கொள்கின்றது. வேளாண்மை மற்றும் கட்டடவாக்கம் ஆகிய இரு துறைகளை மட்டும் உள்ளடக்கும் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கீழ் சேகரிக்கப்படும் முறைசாராத் துறையின் நாளாந்தக் கூலிகள் மீதான தகவல்கள், முறைசாராத் துறையில் நாளாந்தக் கூலிகளின் மேல்நோக்கிய அசைவுகள் வேறுபட்ட வீதங்களில் இருந்தமையை வெளிப்படுத்தின.

இவ்வாண்டில் வேளாண்மைத் துறையில் நாளாந்த பெயரளவுக் கூலிகள் ஏறத்தாழ 7 தொடக்கம் 11 சதவீத வீச்சினுள் அதிகரித்தன. கட்டடவாக்கத்திலான இதனையொத்த வீச்சு 7 இலிருந்து 9 சதவீதம் வரை ஒடுங்கிக் காணப்பட்டது. வேளாண்மைத் துறையினுள், நான்கு துணைத்துறைகள் பெயரளவு நியதிகளில் வேறுபட்ட கூலி அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. பெண் மற்றும் ஆண்களின் கூலிகளிடையேயும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இங்கு, சார்பளவில் குறைந்த வீச்சுக்குள்ளேயாயினும் சில துணைத்துறை களில் பெண்களின் கூலிகளிலான அதிகரிப்பு ஆண்களின் கூலி அதிகரிப்புக்களை விட குறைவாக விளங்குகையில்

அட்டவணை 4.6
**துறை மற்றும் பால் அடிப்படையில் முறைசாரா தனியார் துறையின் நாளாந்த கூலிகள் 1**

| துறை | நாளாந்தக் கூலிகளின் ஆண்டுச் சராசரி (ரூபா) | | | பெயரளவு | | சதவீத மாற்றம் உண்மையான | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2002 | 2003 | 2004 | 2003 | 2004 | 2003 | 2004 |
| **1. வேளாண்மைத்துறை** | | | | | | | |
| **தேயிலை** | | | | | | | |
| ஆண் | 251 | 276 | 304 | 9.8 | 10.3 | 3.5 | 2.7 |
| பெண் | 183 | 199 | 218 | 8.8 | 9.4 | 2.5 | 1.8 |
| **இறப்பர்** | | | | | | | |
| ஆண் | 271 | 278 | 304 | 2.5 | 9.3 | -3.8 | 1.7 |
| பெண் | 187 | 214 | 229 | 14.7 | 6.8 | 8.4 | -0.8 |
| **தெங்கு** | | | | | | | |
| ஆண் | 329 | 335 | 361 | 2.1 | 7.6 | -4.2 | 0.0 |
| **நெல்** | | | | | | | |
| ஆண் | 279 | 304 | 333 | 8.8 | 9.4 | 2.5 | 1.8 |
| பெண் | 216 | 230 | 256 | 6.8 | 11.0 | 0.5 | 3.4 |
| **2. கட்டடவாக்கத்துறை** | | | | | | | |
| **மரவேலையாள்** | | | | | | | |
| முதன்மை மரவேலையாளர் - ஆண் | 439 | 470 | 506 | 7.0 | 7.7 | 0.7 | 0.1 |
| தேர்ச்சிபெற்ற தேர்ச்சியற்ற உதவியாளர் (ஆண்) | 270 | 289 | 314 | 7.0 | 8.8 | 0.7 | 1.2 |
| **கொத்தனார்** | | | | | | | |
| முதன்மைக் கொத்தனார் (ஆண்) | 432 | 466 | 500 | 7.7 | 7.3 | 1.4 | -0.3 |
| தேர்ச்சிபெற்ற தேர்ச்சியற்ற உதவியாள் (ஆண்) | 271 | 292 | 315 | 7.5 | 7.8 | 1.2 | 0.2 |

1. தெங்கு மற்றும் கட்டட நிருமாணத்துறைகளில் பெண்களின் பங்கேற்பு மிகக் குறைவானதாகும்.

மூலம்: நாடு தழுவிய தரவு சேகரிப்பு முறைமை
இலங்கை மத்திய வங்கி

ஏனையவற்றில் பெண்களின் கூலிகள் ஆண்களின் கூலிகளை விட ஓரளவிற்கு விரைவாக அதிகரித்தன. வேளாண்மைத் துறையினுள் உண்மைக் கூலிகள் சிறிதளவாக இருந்தபோதிலும் வெவ்வேறான திசைகளில் அசைந்தன. இதுபோலவே, கட்டடவாக்கத் துறையினுள் உண்மைக் கூலிகள் வேறுபட்ட திசைகளில் ஆனால் பெருமளவு ஒடுங்கிய வீச்சினுள் அசைந்தன. தச்சுத்தொழிலில் உள்ள உதவியாளர்கள் சிறிய உண்மைக் கூலியைப் பெற்றிருக்கையில், கட்டடவாக்கத் துறையிலுள்ள ஏனைய வகைகள் அவற்றின் உண்மைக் கூலிகளில் மிகச் சிறியளவிலான மாற்றங்களையே கொண்டிருந்தன.

அரசதுறை மற்றும் முறைசார்ந்த தனியார் துறையுடன் ஒப்பிடுகையில் முறைசாராத் தனியார் துறையிலான கூலிகள் கடந்த காலங்களில் வெளிப்படுத்தப்பட்ட குறைந்த மாறுபடுந் தன்மையுடன், பெருமளவு சந்தை சார்ந்த சூழலில் பணவீக்கத்திலான அசைவுகளுக்கு பெருமளவு சுயாதீனமாக சீராகுமாற் போல் தோன்றியது.

## 4.4 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

### குடித்தொகை

2004 இல் பதிவாளர் நாயகத் திணைக்களத்தால் மதிப்பிடப்பட்ட நடுவாண்டுக் குடித்தொகை 2003 இல் பதிவு செய்யப்பட்ட 1.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதன்படி 2004 இல் நடுவாண்டுக் குடித்தொகை 19.5 மில்லியனாக விளங்கியதுடன், வளர்ச்சி வீதம் பூச்சியமாக விளங்கிய மன்னார் மாவட்டம் தவிர்ந்த சகல மாவட்டங்களும் குடித்தொகையின் விரிவாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்தன. குடித்தொகையிலான உயர் அதிகரிப்புக்கள் கொழும்பு, கண்டி மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கையில் உயர் வளர்ச்சி வீதங்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டன. 2002 முற்பகுதியிலிருந்து தொடரும் போர்நிறுத்தத்தின் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய சார்புரீதியிலான சமாதான நிலைமைகள், 2004 இல் வடக்கு மாகாணத்திலுள்ள இம்மூன்று மாவட்டங்களிலும் பதிவு செய்யப்பட்ட உயர் குடித்தொகை வளர்ச்சியால் எடுத்துக் காட்டப்பட்டவாறு பெருமளவு மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்வதை இயலச் செய்திருக்கக்கூடும்.

### தொழிற்படை

நாட்டின் தொழிற்படை, தொழில்நிலை மற்றும் வேலையற்றோரை மதிப்பிடும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடாத்தப்படும் காலாண்டுத் தொழிற்படை அளவீடு, 2004 இன் முதலரைப்பகுதியில் வடமாகாணத்தை உள்ளடக்கியதன் மூலம் முழுநாட்டிற்குமான அதன் மாதிரி

அட்டவணை 4.7
**மாவட்ட அடிப்படையில் குடித்தொகை**

'000 ஆட்கள்

| மாவட்டம் | 2003 | 2004(அ) | மாற்றம் | % மாற்றம் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 2,305 | 2,342 | 37 | 1.6 |
| கண்டி | 1,307 | 1,325 | 18 | 1.4 |
| இரத்தினபுரி | 1,036 | 1,049 | 13 | 1.3 |
| பதுளை | 801 | 813 | 12 | 1.5 |
| குருநாகல் | 1,475 | 1,486 | 11 | 0.7 |
| கம்பகா | 2,089 | 2,099 | 10 | 0.5 |
| காலி | 1,011 | 1,020 | 9 | 0.9 |
| அநுராதபுரம் | 764 | 773 | 9 | 1.2 |
| களுத்துறை | 1,077 | 1,085 | 8 | 0.7 |
| மாத்தறை | 780 | 788 | 8 | 1.0 |
| நுவரெலியா | 714 | 722 | 8 | 1.1 |
| அம்பாறை | 605 | 613 | 8 | 1.3 |
| மட்டக்களப்பு | 536 | 544 | 8 | 1.5 |
| புத்தளம் | 721 | 728 | 7 | 1.0 |
| யாழ்ப்பாணம் | 589 | 596 | 7 | 1.2 |
| மாத்தளை | 453 | 459 | 6 | 1.3 |
| திருகோணமலை | 377 | 383 | 6 | 1.6 |
| அம்பாந்தோட்டை | 533 | 538 | 5 | 0.9 |
| மொனராகல | 405 | 410 | 5 | 1.2 |
| பொலனறுவை | 368 | 372 | 4 | 1.1 |
| முல்லைத்தீவு | 141 | 144 | 3 | 2.1 |
| கிளிநொச்சி | 140 | 143 | 3 | 2.1 |
| வவுனியா | 139 | 142 | 3 | 2.2 |
| கேகாலை | 789 | 791 | 2 | 0.3 |
| மன்னார் | 97 | 97 | 0 | 0.0 |
| மொத்தம் | 19,252 | 19462 | 210 | 1.1 |


(அ) தற்காலிகம்

மூலம்: பதிவாளர் நாயகத் திணைக்களம்

பரப்பெல்லையை விரிவாக்கியது. காலாண்டு தொழிற்படை அளவீட்டில் வடமாகாணம் இரண்டு கட்டங்களில் உள்ளடக்கப்பட்டது. இதன் விளைவாக 2004 இன் இரண்டாம் காலாண்டிலிருந்து பரப்பெல்லையானது விரிவுபடுத்தப்பட்டது. 2004 இன் நான்காம் காலாண்டுக்கான காலாண்டு தொழிற்படை அளவீடு கிடைக்காததன் காரணமாக இவ் அத்தியாயத்தில் தொழிற்படையின் முக்கிய மாறிகளைப் பகுப்பாய்வதற்காக காலாண்டு தொழிற்படை அளவீட்டின் மூன்றாம் காலாண்டு தொழிற்படை மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டன.

10 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதையுடைய வேலை செய்யக்கூடிய மற்றும் வேலை செய்ய விரும்பும் ஆட்கள் என வரை விலக்கணப்படுத்தப்படும் தொழிற்படை முக்கியமாக 2004 இன் முதல் அரைப்பகுதியில் காலாண்டுத் தொழிற்படை அளவீட்டில் வடமாகாணத்தை உள்ளடக்கியதன் காரணமாக 2003 இன் மூன்றாம் காலாண்டிலிருந்து 2004 இன் மூன்றாம் காலாண்டில் 0.4 மில்லியனால் 8.0 மில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், முன்பு கிழக்கு மாகாணத்தை உள்ளடக்குகையில் அண்ணளவாக 0.5 மில்லியனால் அதிகரித்த தொழிற்படையுடன் ஒப்பிடுகையில் வடமாகாணத்தை உள்ளடக்குகையில் தொழிற்படையில் ஏற்பட்ட அதிகரிப்பு குறைவாகவே காணப்பட்டது. 2004 இன் மூன்றாம் காலாண்டில் மொத்தத் தொழிற் படையானது தொழில்புரியும் 7.3 மில்லியன் ஆட்களையும் தொழிலற்ற 0.7 மில்லியன் ஆட்களையும் உள்ளடக்கியிருந்தது.

வரைபடம் 4.4
**தொழிற்படையின் போக்கும் தொழிலின்மையும்**
**2000 - 2004 கா 3**




தொழிற்படை பங்கேற்பு வீதம்[1], 2003 இன் மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 2004 இன் மூன்றாம் காலாண்டில் 47.8 சதவீதத்துக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இதற்கான பகுதியளவு காரணமாக, வடமாகாணத்தில் நிலவிய சார்பளவில் குறைந்த தொழிற்படை பங்கேற்பு வீதங்கள் விளங்கின. இது, இலங்கை மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீட்டின் (நுநிசஅ-2003/04) மதிப்பீடுகளால் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்கள் நீங்கலான வடமாகாணத்தின் தொழிற்படை பங்கேற்பு வீதம் நுநிசஅ-2003/04 இன் மொத்தப் பங்கேற்பு வீதமான 46.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 32.9 சதவீதத்தில் குறைவாகக் காணப்பட்டது. இவ்வீழ்ச்சி ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலாரினதும் தொழிற்படை பங்கேற்பு வீதங்களில் காணப்பட்டது. தொழிற்படை பங்கேற்பு வீதத்தின் பால் அடிப்படையிலான பகுப்பானது அண்மைக் காலங்களில் ஆண்களின் பங்கேற்பு வீதம் பெண்களின் பங்கேற்பு வீதத்தினை காட்டிலும் இருமடங்கிற்கும் மேலாக இருப்பதை எடுத்துக்காட்டுகிறது. இது வடக்கு மற்றும் கிழக்கை உள்ளடக்கியதால் மாற்றமடையவில்லை.

## தொழில்நிலை

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடாத்தப்படும் காலாண்டு தொழிற்படை அளவீட்டில், தொழில்புரியும் ஆளொருவர் என்பது கொடுப்பனவிற்காக,

அட்டவணை 4.8
**தொழிற்படை பங்கேற்பு**

| விடயம் | 2003(அ) | 1ஆம் கால் | 2ஆம் கால் | 3ஆம் கால் | 4ஆம் கால் | 2004 (ஆ) | 1ஆம் கால் (இ) | 2ஆம் கால் (ஈ) | 3ஆம் கால் (ஈ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| குடும்ப அலகுகளின் குடித்தொகை (உ) | 15,649 | 15,566 | 15,573 | 15,672 | 15,785 | 16,514 | 16,316 | 16,525 | 16,702 |
| தொழிற்படை '000 ஆட்கள் | 7,654 | 7,643 | 7,527 | 7,609 | 7,835 | 8,003 | 7,987 | 8,038 | 7,984 |
| தொழிலில் உள்ளோர் | 7,013 | 6,943 | 6,920 | 6,973 | 7,215 | 7,319 | 7,337 | 7,314 | 7,305 |
| தொழில் அற்றோர் | 641 | 700 | 607 | 636 | 620 | 684 | 650 | 724 | 679 |
| தொழிற் படை பங்கேற்பு வீதம் (%)(ஊ) | 48.9 | 49.1 | 48.3 | 48.6 | 49.6 | 48.5 | 49.0 | 48.6 | 47.8 |
| ஆண் | 67.2 | 66.8 | 66.8 | 67.1 | 68.0 | 66.9 | 67.4 | 67.7 | 65.7 |
| பெண் | 31.4 | 32.2 | 30.6 | 30.8 | 32.0 | 31.1 | 31.4 | 30.8 | 31.0 |

மூலம்: தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.

(அ) 2002ஆம் ஆண்டின் 4ஆம் காலாண்டுவரை தரவு வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களை உள்ளடக்கவில்லை. 2003ஆம் முதலாம் காலாண்டிலிருந்து கிழக்கு மாகாணம் உள்ளடக்கப்பட்டதுடன் வடமாகாணம் மட்டும் அளவீட்டிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது.
(ஆ) முதல் மூன்று காலாண்டுகளின் சராசரி
(இ) தரவுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இரண்டையும் உள்ளடக்கியுள்ளதுடன் வவுனியா, கிளிநொச்சி, மற்றும் முல்லைத்தீவு, மாவட்டங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.
(ஈ) தரவுகள் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது.
(உ) பத்து வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை.
(ஊ) குடும்ப அலகுகளின் குடித்தொகையில் தொழிற்படையின் சதவீதம்.

1. 10 வயதும் அதற்கு மேற்பட்டதுமான குடும்ப குடித்தொகைக்கான தொழிற்படையின் விகிதம்.

இலாபத்துக்காக அல்லது குடும்பத்தின் நன்மைக்காக (கொடுப்பனவின்றி) அளவீட்டிற்கு முந்திய வாரத்தில் ஒரு மணித்தியாலம் அல்லது அதற்குமேல் தொழில் செய்தவர் என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. நோய், மோசமான காலநிலை மற்றும் தொழில் தகராறு காரணமாக தற்காலிகமாக வேலைக்குச் சமூகமளிக்காத ஊழியர்களும்தொழில் செய்வோராகவே கருதப்படுகின்றனர். காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி, வடமாகாணத்தின் மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியமையின் பகுதியளவு காரணத்தால் 2004 இன் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளிடையே வீழ்ச்சியடைந்த தொழில்நிலை வீதம் 2004 இன் மூன்றாம் காலண்டில் அதன் போக்கை 91.5 சதவீதத்திற்கு மாற்றியமைத்தது. 2003 மற்றும் 2004 இன் மூன்றாம் காலாண்டுகளுக்கிடையே தொழில்நிலை வீதத்தில் சிறிய வீழ்ச்சி காணப்பட்டபோதிலும் தொழில்நிலை 0.32 மில்லியன் ஆட்களால் அதிகரித்தது.

ஆய்வுக்குரிய காலப்பகுதியில் தொழில்நிலையில் ஏற்பட்ட அதிகரிப்பானது பணிகள் துறையின் தொழில்நிலையில் ஏற்பட்ட அதிகரிப்பால் முக்கியமாக ஏற்பட்டிருக்கையில் வேளாண்மை மற்றும் கைத்தொழிற் துறைகளும் குறைந்த வீதத்தில் பங்களிப்புச் செய்தன. இதனால், 2003 இன் மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 2004 இன் மூன்றாம் காலாண்டில் பணிகள் துறையின் தொழில்நிலைப் பங்கு அதிகரித்திருக்கையில் ஏனைய இரு துறைகளினதும் பங்குகள் வீழ்ச்சியடைந்தன. பணிகள் துறையிலான தொழில்நிலை வளர்ச்சி ஆய்வுக்குரிய காலப்பகுதியில் இத்துறையினால் பதிவு செய்யப்பட்ட துறைவாரியான ஆகக்கூடிய மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியுடன் ஒத்திருக்கையில் வேளாண்மைத் துறையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கமடைந்து இத்துறையிலான தொழில்நிலை சிறிதளவால் அதிகரித்திருப்பதானது இத்துறையில் தொழிலாளர் உற்பத்தித்திறன் வீழ்ச்சியடைந்தமையை எடுத்துக் காட்டுகிறது.

2004 இன் மூன்றாம் காலாண்டுக்கான காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி, தொழில்நிலை வகைப்படுத்தலின் ஐந்து வகைகளினிடையே தனியார்துறை ஊழியர்களின் பங்கு மட்டும் அதிகரித்திருக்கையில், 2003 இன் மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 2004 இன் மூன்றாம் காலாண்டில் கொடுப்பனவு செலுத்தப்படாத குடும்பத் தொழிலாளர்களின் பங்கு ஆகக்கூடிய வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. எனினும், 2004 இன் நான்காம் காலாண்டுக்கான காலாண்டு தொழிற்படை அளவீட்டால் மதிப்பிடப்பட்ட அரசதுறை தொழில்நிலையின் பங்கு, இக் காலப்பகுதியில் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட பட்டதாரி ஆட்சேர்ப்பு காரணமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

உயர் கல்வித் தராதரங்களைக் கொண்டுள்ள புதிய தொழிற்படையை சேர்த்துக்கொள்ளும் அரசின் நிகழ்ச்சித் திட்டத்தை அமுலாக்குவதன் மூலம் அரசு வழங்கப்படும் பணிகளின் தரத்தினை மேம்படுத்துவதனூடாக அரசதுறையைப் பலப்படுத்துமென எதிர்பார்க்கப் படுகின்றது. அதேவேளை, இவை நாட்டில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ் ஆட்சேர்ப்புக்களை

அட்டவணை 4.9

**பொருளாதார நடவடிக்கைகளின்படி தொழில்நிலை**

| துறை | ஆயிரம் ஆட்களில் | | | | | | | மொத்த தொழில் நிலையின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2003(அ) | | | | 2004 | | | 2003 | 2004 |
| | 1 ஆம் காலாண்டு | 2 ஆம் காலாண்டு | 3 ஆம் காலாண்டு | 4 ஆம் காலாண்டு | 1ஆம் காலாண்டு (அ) | 2 ஆம் காலாண்டு (இ) | 3 ஆம் காலாண்டு (இ) | 3 ஆம் காலாண்டு | 3 ஆம் காலாண்டு |
| வேளாண்மை | 2,381 | 2,415 | 2,439 | 2,303 | 2,355 | 2,608 | 2,492 | 35.0 | 34.1 |
| கைத்தொழில் | 1,504 | 1,457 | 1,514 | 1,643 | 1,625 | 1,630 | 1,564 | 21.7 | 21.4 |
| தயாரிப்பு | 1,106 | 1,125 | 1,120 | 1,275 | 1,242 | 1,239 | 1,221 | 16.1 | 16.7 |
| கட்டடவாக்கம் | 397 | 332 | 393 | 367 | 383 | 390 | 344 | 5.6 | 4.7 |
| பணிகள் | 3,058 | 3,048 | 3,020 | 3,270 | 3,357 | 3,076 | 3,248 | 43.3 | 44.5 |
| வர்த்தகம், உணவகங்கள் முதலியன | 988 | 957 | 958 | 1,062 | 1,141 | 961 | 1,013 | 13.7 | 13.9 |
| போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் | 376 | 332 | 358 | 390 | 401 | 460 | 418 | 5.1 | 5.7 |
| நிதி காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து | 217 | 195 | 177 | 190 | 171 | 193 | 187 | 2.5 | 2.6 |
| தனிப்பட்ட பணிகள் மற்றும் ஏனையவை (ஈ) (உ) | 1,478 | 1,565 | 1,528 | 1,627 | 1,644 | 1,461 | 1,630 | 21.9 | 22.3 |
| மொத்தத் தொழில் வாய்ப்பு | 6,943 | 6,920 | 6,973 | 7,215 | 7,337 | 7,314 | 7,305 | 100 | 100 |
| தொழிற்படையின் சதவீதம் | 90.8 | 91.9 | 91.6 | 92.1 | 91.9 | 91.0 | 91.5 | | |

மூலம்: தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.

(அ) 2002ஆம் ஆண்டின் 4ஆம் காலாண்டுவரையான தரவு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கவில்லை. 2003ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிலிருந்து கிழக்கு மாகாணம் உள்ளடக்கப்பட்டிருக்கையில் வடக்கு மாகாணம் மட்டும் அளவீட்டிலிருந்து தவிர்க்கப்பட்டது.

(ஆ) தரவுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இரண்டையும் உள்ளடக்கியதுடன் வவுனியா, கிளிநொச்சி, மற்றும் முல்லைத்தீவு, மாவட்டங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

(இ) தரவுகள் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது.

(ஈ) 2002 இன் 1ஆம் காலாண்டிலிருந்து காலாண்டு தொழிற்படை அளவீட்டில் சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் தனியாள் பணிகள் மற்றும் ஏனையவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(உ) 2001ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிலிருந்து காலாண்டு தொழிற்படை அளவீட்டில் மின், வாயு மற்றும் நீர் தனியாள் பணிகள் மற்றும் ஏனையவற்றின் கீழ் வகைப் படுத்தப்பட்டுள்ளன.

நடைமுறைப்படுத்தும் பொருட்டு, நாட்டின் அரச துறையில் ஆட்களைக் குறைப்பதை பணிக்கும் 2002 ஒத்தோபர் 24 திகதியிடப்பட்ட இல.16(1) கொண்ட முகாமைத்துவ சுற்றுநிரூபத்தை அரசு இரத்துச் செய்ய வேண்டியிருந்தது. இதன்படி, பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் அரச துறையில் பணிக்கமர்த்துவதற்காக அவர்களை ஆட்சேர்க்கும் நோக்குடன் கிட்டத்தட்ட 42,000 பட்டதாரிகளுக்கு அரச துறையில் பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டன. இத்துடன், பொது நிருவாகத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட 1,640 எழுதுவினைஞர் தரத்திலான நியமனங்களும் அரசதுறையின் விரிவாக்கத்திற்கு வழிவகுத்தன. எனினும், உற்பத்தித் திறன் வீழ்ச்சியடைவதற்கு இட்டுச்செல்லும் அரச துறைக்கான தேவையற்ற நியமனங்களைத் தவிர்க்கும் நோக்கில் அனைத்து துணை மற்றும் சிற்றூழியர்கள் தரங்களிலான பதவிகளுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான இடைநிறுத்தம் தொடர்ந்தும் மாற்ற மின்றி இருந்தது.

2004 இன் நான்காம் காலாண்டில் அரச துறையிலேற்பட்ட விரிவாக்கமானது மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட அரசதுறை தொழில்நிலை வருடாந்த அளவீட்டில் பிரதிபலிக்கப்பட்டது. இவ்அளவீட்டின்படி, மத்திய அரசு, மாகாண அரசு மற்றும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களை உள்ளடக்கிய அரச நிறுவனங்களில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2004 இல் 7.1 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்கு மாறாக, 2003 இல் அரசதுறையில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை, 2001 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட அரசதுறையில் ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் முன்னைய அரசின் கொள்கை காரணமாக 0.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

முக்கியமாக அரசுசார் நிறுவனங்களில் உள்ள அளவுக்கதிகமான அலுவலர்களைக் குறைப்பதற்காக 2001 இலிருந்து அமுல்படுத்தப்பட்ட சுயவிருப்புடனான ஓய்வூதியத் திட்டங்கள் 2004 வரை ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் மிகுந்த பயனுடையதாக

அட்டவணை 4.10
**அரசதுறை தொழில் நிலை**

| | 2003 (அ) | % மாற்றம் | 2004 (அ) | % மாற்றம் |
|---|---|---|---|---|
| அரசு(ஆ) | 785,756 | -0.6 | 841,756 | 7.1 |
| அரசுசார் நிறுவனங்கள்(இ) | 257,452 | -5.1 | 252,659 | -1.7 |
| அரசதுறை | 1,043,208 | -1.7 | 1,094,415 | 4.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை
(ஆ) மத்திய அரசாங்கம், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றம்,
(இ) அரச கூட்டுத்தாபனங்கள், சட்ட நியதிச் சபைகள், அதிகாரசபைகள் போன்றன.

இருந்தது. சுயவிருப்புடனான ஓய்வூதியத் திட்டத்தின் கட்டம் கட்டமான அகற்றலானது 2003 இன் 5.1 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2004 இல் அரசுசார் நிறுவனங்களிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 1.9 சதவீதத்தினால் சிறியளவில் வீழ்ச்சியடைந்ததன் மூலம் பிரதிபலிக்கப்பட்டது.

## தொழில் வாய்ப்பின்மை

வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு நீங்கலான வடமாகாணத்தை உள்ளடக்கியதன் காரணமாக 2003 இன் இறுதியிலிருந்து 2004 இன் முதலாம் காலாண்டில் 8.1 சதவீதத்திற்கு சிறிதளவால் உயர்வடைந்த தொழில் வாய்ப்பின்மை வீதத்தின் மாதிரி உள்ளடக்கும் விதத்தில் நாடு முழுவதையும் விரிவாக்கியதைத் தொடர்ந்து இரண்டாம் காலாண்டில் 9.0 சதவீதத் திற்கு மேலும் அதிகரித்தது. 2004 இன் முதல் அரைப் பகுதியில் தொழில் வாய்ப்பின்மையிலேற்பட்ட அதிகரிப்பானது காலாண்டு தொழிற்படை அளவீட்டில் வடமாகாணத்தை உள்ளடக்கியதன் பகுதியளவுக் காரணத்தால் ஏற்பட்டதாகும். இது, மூன்றாம் காலாண்டில் 8.5 சதவீதத்திற்கு மாற்றமடைந்தமைக்கு இக்காலப்பகுதியில் பணிகள் துறையில் உருவாக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களே தனியொரு காரணமாக விளங்கியது.

குறிப்பாக உயர்கல்வி கற்றஇளைஞர்களிடையேயான தொழில்வாய்ப்பின்மை தொடர்ந்து காணப்படுதல் காலாண்டு தொழிற்படை அளவீட்டிலிருந்து புலனாகிறது. இக்காலாண்டு தொழிற்படை அளவீட்டின் மதிப்பீடுகளின்படி, 20-29 வயதுத் தொகுதியிலான தொழில்வாய்ப்பின்மை வீதம் 2003 இன் மூன்றாம் காலாண்டின் 19.6 சதவீதத்திலிருந்து 2004 இன் மூன்றாம் காலாண்டில் 21.4 சதவீதத்திற்கு அதிகரித்திருக்கையில் 2004 இன் மூன்றாம் காலாண்டில் க.பொ.த (சா.த), க.பொ.த (உ.த) மற்றும் உயர் தகைமைகளை கொண்டோரிடையேயான உயர் தொழில் வாய்ப்பின்மை வீதங்கள் முறையே 14.1 சதவீதத்திற்கும் 17.3 சதவீதத்திற்கும் மேலும் அதிகரித்தன. படித்த இளைஞர்களிடையேயான

அட்டவணை 4.11
**தொழிலற்றோர் வீதம்**
**(தொழிற்படையின் சதவீதமாக)**

| வகை | 2003 (அ) | 1ஆம் கால் | 2ஆம் கால் | 3ஆம் கால் | 4ஆம் கால் | 2004 (ஆ) | 1ஆம் கால் (இ) | 2ஆம் கால் (ஈ) | 3ஆம் கால் (ஈ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அனைத்து | 8.4 | 9.2 | 8.1 | 8.4 | 7.9 | 8.5 | 8.1 | 9.0 | 8.5 |
| பால்வகைப்படி | | | | | | | | | |
| ஆண் | 6.0 | 6.4 | 5.7 | 6.3 | 5.9 | 6.3 | 6.2 | 6.6 | 6.0 |
| பெண் | 13.2 | 14.6 | 13.1 | 12.8 | 12.1 | 13.2 | 12.2 | 14.0 | 13.5 |
| வயது அடிப்படையில் | | | | | | | | | |
| 15 - 19 | 30.3 | 32.3 | 29.4 | 29.9 | 29.6 | 30.6 | 31.7 | 34.2 | 25.8 |
| 20 - 29 | 19.4 | 21.0 | 19.0 | 19.6 | 17.9 | 19.7 | 17.9 | 19.8 | 21.4 |
| 30 - 39 | 3.9 | 4.8 | 3.5 | 3.4 | 3.7 | 3.7 | 3.8 | 4.4 | 2.9 |
| 40 உம் அதற்குமேல் | 1.1 | 1.3 | 1 | 1.1 | 1 | 1.3 | 1.5 | 1.3 | 1.1 |
| கல்வி அடிப்படையில் | | | | | | | | | |
| வகுப்பு 4/ ஆண்டு 5 அதற்குக்கீழ் | 1.7 | 1.7 | 1.6 | 2.0 | 1.7 | 2.1 | 2.5 | 2.3 | 1.4 |
| வகுப்பு 5-9/ 6-10 | 7.4 | 8.1 | 7.0 | 8.3 | 6.1 | 7.3 | 7.3 | 8.0 | 6.6 |
| க.பொ.ச(சா.த) பொ.க.தே.சா. | 13.0 | 14.8 | 12.8 | 11.2 | 13.3 | 12.9 | 11.6 | 12.9 | 14.1 |
| க.பொ.ச(உ.த) தே.க.பொ.த.ப. அதற்கு மேலும் | 16.5 | 18.1 | 15.9 | 15.2 | 17.1 | 17.0 | 14.6 | 19.0 | 17.3 |

மூலங்கள்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம். இலங்கை மத்திய வங்கி.

(அ) 2002இன் நான்காம் காலாண்டு வரை, தரவு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கவில்லை. 2003ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிலிருந்து கிழக்கு மாகாணம் உள்ளடக்கப் பட்டிருக்கையில் வடக்கு மாகாணம் மட்டும் அளவீட்டிலிருந்து தவிர்க்கப்பட்டது.
(ஆ) முதல் மூன்று காலாண்டுகளின் சராசரி
(இ) தரவுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இரண்டையும் உள்ளடக்கியதுடன் வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.
(ஈ) தரவு சகல மாவட்டங்களையும் உள்ளடக்குகின்றது.

உயர் தொழில் வாய்ப்பின்மை வீதங்கள் இலங்கை மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட நுநிசஅ-2003/04 இன் மதிப்பீடுகளினால் மேலும் உறுதிப் படுத்தப்படுகின்றது. நுநிசஅ-2003/04 இன்படி, க.பொ.த (சா.த) மற்றும் க.பொ.த (உ.த) மற்றும் அதற்கு மேலான தகைமைகளைக் கொண்டுள்ள ஆட்களின் தொழில் வாய்ப்பின்மை வீதங்கள் முறையே 13.8 சதவீதமாகவும், 18.2 சதவீதமாகவும் விளங்குகையில் பொதுவான தொழில் வாய்ப்பின்மை வீதம் 9.0 சதவீதமாக விளங்கியது. எனினும், அரசதுறையில் படித்த இளைஞர்களை சேர்த்துக் கொள்வதற்கு அரசால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் காரணமாக 2004 இன் நான்காம் காலாண்டில் இவ்வீதங்கள் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின்படி, 2004 இல் தொழிலுக்காக வெளிநாடு சென்றோரின் எண்ணிக்கை 2.1 சதவீதத்தால்

வளர்ச்சியடைந்து 213,114 ஆக விளங்கியது. சவுதிஅரேபியா, குவைத், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் கட்டார் போன்ற மத்திய கிழக்கு நாடுகள் 2004 இல் வெளிநாடு சென்ற மொத்தத் தொழிலாளர்களில் ஏறத்தாழ 80 சதவீதத்தை ஈர்த்துக் கொண்டன. 2003 இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2004 இன் முதலரைப்பகுதி கிட்டத்தட்ட 9 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பினை எடுத்துக்காட்டிய போதிலும், எறிவு செய்யப்பட்ட மொத்த வெளிநாட்டுத் தொழில்நிலையான 220,600 இனை 2004 இல் எய்த முடியவில்லை. வெளிநாடுகளுக்கு புறப்பட்டுச் செல்லும்வேளையில் குடிபெயரும் தொழிலாளர்களைப் பதிவு செய்யும் முறைமையில் பணியகத்தால் 2004 இல் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள், வெளிச்செல்லும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் பதிவுகளின் துல்லியமான தன்மையை மேம்படுத்தியதன் மூலம் பதிவு செய்யப்பட்ட வெளிச்செல்லும் மொத்த எண்ணிக்கை குறிப்பிட்ட அளவிற்கு அதிகரித்தது.

வெளிநாட்டுக்குச் செல்லும் மொத்தத் தொழிலாளர்களில் பெண்களின் பங்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்திருப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிக்கையிட்டுள்ளது. எனினும், பெண்களின் பங்கு 2004 இல் 60 சதவீதத்திற்கும் மேல் தொடர்ந்திருந்தமைக்கு மனிதவலு வகைகளினுள் பணிப்பெண்களின் பங்கு 2003 இன் 49 சதவீதத்திலிருந்து 52 சதவீதத்திற்கு அதிகரித்தமையே காரணமாகும். 2001 இலிருந்து வீழ்ச்சியடைந்த போக்கைக் கொண்டிருந்த பணிப்பெண்களின் பங்கு 2004 இல் மாற்றமடைந்தது. வெளிநாட்டுத் தொழிலுக்கு செல்லும் தொழிலாளர்கள் பெரும்பாலும் குறைந்த வருமானம் பெறுவோர் தொகுதியைச் சேர்ந்த பணிப்பெண்கள் போன்ற கடினமாக வேலைசெய்யும் தொழிலாளர்களையே தொடர்ந்து உள்ளடங்கியிருந்ததை இது மேலும் உறுதிப்படுத்தியது. சித்திரவதைகளிலிருந்து மரணம் வரை பணிப்பெண்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகளுக்கு மேலதிகமாக மத்திய கிழக்கில் நிலவும் போருக்குப் பின்பான அமைதியற்ற நிலைமைக்கு மத்தியிலும் பணிப்பெண்கள் வேலையை ஏற்றுக் கொள்வதானது உள்நாட்டுப் பொருளாதாரத்தை விட அங்கு சிறந்த பொருளாதார வசதிகள் கிடைக்குமென்ற அவர்களின் எதிர்பார்ப்புக்களை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது.

அட்டவணை 4.12
வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு

| விடயம் | 2001 | 2002 | 2003 | 2004(அ) |
|---|---|---|---|---|
| தொழிலில் உள்ளோர் | 184,007 | 203,773 | 208,808 | 213,114 |
| மூலத்தின்படி % | | | | |
| உரிமம் பெற்ற முகவர்கள் | 72 | 75 | 74 | 73 |
| ஏனையோர் | 28 | 25 | 26 | 27 |
| பால்வகையின்படி % | | | | |
| ஆண்கள் | 33 | 35 | 36 | 38 |
| பெண்கள் | 67 | 65 | 64 | 62 |
| மனிதவலுவகைப் படி % | | | | |
| வீட்டுப் பணிப்பெண்கள் | 56 | 53 | 49 | 52 |
| தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் | 20 | 22 | 23 | 21 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் | 18 | 18 | 21 | 20 |
| ஏனையோர் | 6 | 7 | 7 | 7 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

2004 இல் மனிதவலு வகைகளிடையே தேர்ச்சி பெற்றோர் வகைகளின் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சியானது, நாடு அடைவதற்கு எதிர்பார்த்திருந்ததற்கு மாறானதாக விளங்கியது. ஏனெனில், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் எப்பொழுதும் ஏனையோரை விட போட்டித்தன்மை மிக்கவர்களாக விளங்கி வெளிநாட்டுத்தொழில் சந்தையில் பெருமளவு கேள்வியைக் கொண்டிருந்தமையேயாகும். இலங்கை, வெளிநாட்டுத் தொழிற் சந்தையில் தேர்ச்சி பெற்றோர் வகையில் தொடர்ந்தும் குறைந்த போட்டித் தன்மையுடையதாக விளங்கி, தொழில் பயிற்சி நிறுவனங்கள் இருப்பதற்கு மத்தியிலும் தேர்ச்சி பெற்ற குடிபெயரும் தொழிலாளர்களுக்கான கேள்வியை நிரம்பல் செய்வதில் குறைந்தளவிலேயே வெற்றிகண்டது. இப்பிரச்சனைக்கு தீர்வுகாணும் பொருட்டு 2004 இல் இலங்கையின் மூன்றாம் நிலைக்கல்வி முறையை மீளஅமைத்து அபிவிருத்தி செய்வதற்காக கொடையாளிகளின் நிதியிடலுடன் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப் பட்டது. குறிப்பிட்ட துறையில் ஏற்கனவே இருக்கும் வாய்ப்புக்களை எடுத்துக்கூறுவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பல தரப்பட்ட வர்த்தகங்களிலான தொழில்நிலை பற்றிய எதிர்மறையான சமூக மனப்பாங்குகளை மாற்றுதல் என்பன இச்செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாகும்.

### தொழிலாளர் உற்பத்தித்திறன்

ஊழியர் ஒருவருக்கான வருடாந்த பெறுமதி கூட்டல் அடிப்படையில் மதிப்பிடப்படும் தொழிலாளர் உற்பத்தித்திறன் 2000 இலிருந்து 2004 வரையான காலப்பகுதிக்கு ஆளொருவருக்கு ரூ.135,000 ஆக தொடர்ந்து விளங்கியது. பணிகள் துறையிலான தொழிலாளர் உற்பத்தித்திறன் ஆளொருவருக்கு ரூ.170,000 ஆக அதிகூடியதாக இருந்தது. இதேவேளை, வேளாண்மைத் துறையிலான உற்பத்தித்திறன் ஏனைய இரண்டு துறைகளிலான உற்பத்தித் திறனின் அரைவாசியை விட குறைவாக விளங்கியது. எனவே, இது மொத்த உற்பத்தித்திறனை பணிகள் மற்றும் கைத்தொழில் துறை மட்டங்களுக்கு கீழாக குறைத்தது.

அட்டவணை 4.13
**முக்கிய பொருளாதாரத்துறைகளின்படி தொழிலாளர் உற்பத்தியாக்கம்**

| | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 (அ) |
|---|---|---|---|---|---|
| **நிலையான விலைகளில் (1996)** | | | | | |
| **மொ.உ.உ ரூ.மில்லியன்** | 857,035 | 843,794 | 877,248 | 929,226 | 980,662 |
| வேளாண்மை | 175,317 | 169,377 | 173,623 | 176,213 | 173,213 |
| கைத்தொழில் | 236,347 | 231,350 | 233,562 | 246,446 | 259,786 |
| பணிகள் | 445,371 | 443,067 | 470,063 | 506,567 | 547,663 |
| **மொத்தத் தொழில்நிலை** | | | | | |
| **'000 ஆட்கள்** | 6,310 | 6,235 | 6,670 | 7,012 | 7,319 |
| வேளாண்மை | 2,274 | 2,033 | 2,359 | 2,384 | 2,485 |
| கைத்தொழில் | 1,491 | 1,491 | 1,387 | 1,529 | 1,607 |
| பணிகள் | 2,545 | 2,711 | 2,924 | 3,099 | 3,227 |
| **தொழிலாளர் உற்பத்தியாக்கம்** | | | | | |
| **ரூ.'000 ஆளுக்கு** | 135.8 | 135.3 | 131.5 | 132.5 | 134.0 |
| வேளாண்மை | 77.1 | 83.3 | 73.6 | 73.9 | 69.7 |
| கைத்தொழில் | 158.5 | 155.2 | 168.4 | 161.2 | 161.7 |
| பணிகள் | 175.0 | 163.4 | 160.8 | 163.5 | 169.7 |

மூலம்: தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம். இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை.

2002 இலிருந்து மொத்த உற்பத்தித் திறனில் அவதானிக்கப்பட்ட சிறிதளவான அதிகரிப்பானது பணிகள் துறை உற்பத்தித் திறனிலான அதிகரித்துச் செல்லும் போக்கால் மட்டுமே ஏற்பட்டதாகும்.

## 4.5 கொள்கைகளும் பிரச்சனைகளும்

2004 இன் 5.4 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மற்றும் சார்புரீதியில் உறுதியான தொழில்வாய்ப்பின்மை வீதங்கள் என்பனவற்றுக்கு மத்தியிலும் அதிகரித்துச்செல்லும் பணவீக்கப் போக்கானது பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு தொடர்பில் கரிசனைக்குரியதொரு விடயமாக விளங்குகிறது. உயர்வடைந்து செல்லும் பணவீக்கம் பற்றிய சமிக்ஞைகள் பணவீக்கத்தை மேலும் அதிகரித்து பணவீக்க எதிர்பார்ப்புக்களை உயர்வடையச் செய்து பணவீக்க கூலி அதிகரிப்புச்சுற்றொன்றுக்கு இட்டுச்செல்லும். எனவே, இப்போக்கைக் கட்டுப் படுத்துவதற்கு அவசியமான சீர்ப்படுத்தல் நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.

முறைசாராத் தனியார் துறையின் பெயரளவு கூலி அசைவுகளை ஏனைய இரு துறைகளான அரச துறை மற்றும் முறைசார் தனியார் துறையுடன் ஒப்பிடுகையில், இத்துறையின் பெயரளவுக் கூலிகள் மாற்றமுறும் வாழ்க்கைச் செலவுடனும் உற்பத்தித் திறனுடனும் இசைந்துசெல்லும் விதத்தில் கணிசமாக சீராக்கப்படுவதை எடுத்துக்காட்டுகிறது. ஏனைய இரு துறைகளில் ஒழுங்கற்ற இடைவெளிகளில் அவ்வப்போதைக்கு மேற்கொள்ளப்படும் நிருவகிக்கப் படும் கூலிகளிலான திருத்தங்கள், செலவுத்தூண்டல் பணவீக்க அழுத்தத்தை அதிகரிக்கக்கூடிய உற்பத்தித் திறனில் அதற்கு சமனான மேம்பாடெதனையும் ஏற்படுத்தாத அவசியமற்ற உண்மைக்கூலி அதிகரிப்புக் களை ஏற்படுத்தக்கூடும். எனவே, உண்மைக் கூலிகளிலான ஏதேனும் அதிகரிப்பை ஈடுசெய்யத்தக்க வகையில் உற்பத்தித் திறனிலான மேம்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு செயற்றிறன் மிக்க நடவடிக் கைகள் தேவைப்படுகின்றன.

மூலவளங்களின் செயற்றிறன் மிக்க ஒதுக்கீடு, உற்பத்தியாக்க மேம்பாடுகள், நெகிழ்வுத் தன்மையிலான மேம்பாடுகள் மற்றும் தொழில்தருநர் மற்றும் ஊழியர்கள் ஆகிய இரு பகுதியினருக்குமான நன்மைபயக்கும் சூழல் என்பவற்றினூடான தொழிற் சந்தையிலான உயர் பங்கேற்பு என்பனவற்றினை உறுதிப்படுத்துவதற்குத் தொழிற்சந்தைச் சீர்திருத்தங்கள் அவசியமானதென்பதனை அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. தொழிற்சந்தையிலான அவ்வாறான மாற்றங்கள் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய உயர் பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கும் மற்றும் பன்னாட்டு போட்டித்தன்மையைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் அத்தியாவசியமாகின்றன. எனினும், நிலையான கொள்கை இல்லாமை நிச்சயமற்ற சூழலை ஏற்படுத்தியுள்ளது. இது தொழிலாளர் செலவுகள் மற்றும் தொழிலாளர் உற்பத்தித்திறன் ஆகிய இரு நியதிகளிலும் சீர்திருத்தங்கள் எதுவும் இல்லாதிருப்பதை விட பெருமளவு தீங்கை விளைவிப்பதாகத் தோன்று கிறது. தேவையான சீர்திருத்தங்களைத் தாமதப் படுத்துவது நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும் என்பதால், நீண்டகால பொருளாதார அபிவிருத்தியை பாதிக்கும் ஏற்கனவே இருக்கும் தொழில் சந்தையின் நெகிழ்வற்ற தன்மையை நீக்குவதை நோக்கிய, சகல அத்தகைய சீர்திருத்தங்களை நடைமுறைக்கிடு வதற்கு சகல பிரிவினரும் இணைந்து செயற்பட வேண்டிய தேவை இருக்கிறது.

வேளாண்மைத் துறையின் குறைந்த உற்பத்தித் திறன் மட்டமானது, நன்கு வியாபித்துள்ள அமைப்பு ரீதியான குறைபாடு காரணமாக இத்துறை பலவீனமான செயலாற்றத்தை கொண்டிருப்பதனை பிரதிபலிக் கின்றது. வேளாண்மைத்துறை மொத்தத் தொழிற் படையில் அநேகமாக 35 சதவீதத்தை இன்னமும் உள்வாங்குவதால் இது கரிசனைக்குரிய விடயமாக திகழ்கிறது. காணிச் சந்தையிலான கட்டுப்பாடுகள் மற்றும் திரிபுபடுத்தப்பட்ட அரச தலையீடுகளின் தொடர்ச்சி உள்ளடங்கலாக கடந்த காலத்தில் பின்பற்றப்பட்ட ஒழுங்கற்ற கொள்கைகள் நிலைமையை மோசமாக்கியுள்ளன. எனவே, இத்துறையில் வேளாண்மை உற்பத்தி மற்றும் காரணி உற்பத்தித் திறன் ஆகிய இரண்டையும் மேம்படுத்துவதற்கு சந்தையை அடிப்படையாகக் கொண்ட நீடித்து

நிலைத்திருக்கக் கூடிய உத்தி மூலம் இப்பலயீனங்களுக்கு உறுதியாக தீர்வு காண்பது அவசியமானதாகும்.

உள்நாடு மற்றும் வெளிநாடு ஆகிய இரண்டு தொழிற் சந்தைகளிலும் காணப்படும் தொழிலாளர் கேள்வி மற்றும் வழங்கலுக்கிடையேயான பொருத்தமின்மையானது இலங்கையில் எதிர் கொள்ளப்படும் முக்கியவொரு பிரச்சனையாக இனங் காணப்பட்டுள்ளது. தொழில் தேடுவோருக்கும், ஆர்வமுள்ள தொழில் தருநர்களுக்குமிடையே இலகுவான இணைப்பை வழங்குவதற்கென நிறுவப்பட்ட வேலைவாய்ப்பு இணையத்தளத்தில் கிட்டத்தட்ட 101,000 ஆட்கள் பதிவு செய்து கொண்டுள்ள போதிலும் பெரும்பாலும் கைவேலை மற்றும் அதனுடன் தொடர்பான வர்த்தகத் துறையில் கிட்டத்தட்ட 13,000 நிரப்பப்படாத வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் படியும் கட்டடவாக்கத் துறையில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் ஓட்டுநர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கான கேள்விகள் வெளிநாட்டுத் தொழிற் சந்தையில் குறிப்பாக மத்திய கிழக்கில் அவ்வாறான தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் வழங்கல் பற்றாக்குறை காரணமாக பூர்த்தி செய்யப்படவில்லை. தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கான கேள்வியை ஈடுசெய்வதற்காக மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு போன்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட தேர்ச்சிப் பயிற்சி மற்றும் கேள்வியை ஈடுசெய்வதற்காக மேற்கொள்ளப் பட்ட சில கல்விச் சீர்திருத்தங்கள் என்பவற்றுக்கு மத்தியிலும் பொருத்தமின்மை தொடர்கின்றது. இப்பொருத்த மின்மையைக் குறைக்கும் பொருட்டு கல்விச் சீர்திருத்த வாதிகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடுவோர் மற்றும் தொழில் தேடுவோர் ஆகியோருக்கு கேள்வி உயர்வாகவுள்ள பதவிகள் பற்றிய மிகவும் துல்லியமான தகவல்கள் வழங்கப்பட வேண்டும். பொருளாதாரத்திலுள்ள முக்கிய தொழில் சார்ந்த துறைகளுக்கான நடைமுறையிலிருக்கும் முக்கிய தேர்ச்சிகள், ஆற்றல்கள் மற்றும் கூலி மட்டங்கள் என்பன மீது தொழில்சார்ந்த அளவீடுகளை நடாத்துவதானது தொழில் தேடுவோருக்கு அத்தகைய தகவல்கள் கிடைப்பதற்கும் தொழில் சந்தையில் கேள்விக்கும் வழங்கலுக்குமிடையே காணப்படும் தகவல் இடைவெளியை குறைப்பதற்கும் உதவும்.